உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதிஸு மாசிமீ கஉ { பகுதி 8
1922ஸு பிப்ரவரிமீ 12உ

## கடவுள் வணக்கம்.

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
மிவ்வுலக மெவ்வுல கமோ
என்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற் றின்பமோ
வென்னின்மக மேரு வாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாளு மாக்கி நாளும்
துற்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையும்
சூறையிட் டிந்தர ஜாலம்
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
யம்மம்ம வெல்ல லெளிதோ
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
தருளோ வலாது மருளோ
சமயநெறி காணுத சாக்ஷிநீ சூக்ஷ்மமாத்
தமியனேற் குளவு புகலாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

சொல்லற் கரிய பரம்பொருளே சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலிலெனை விட்டெங் கொளித்தா யாகெட்டேன்
கல்விற் பசிய நாருரித்துக் கடுகிற் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய வந்தகனூர்க் கானாக் கினையோ வறியேனே.

அறிவுக் கறிவு தாரகமென் றறிந்தே யறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய் நின்ற நிலையுந் தெரியாது
குறியற் றகண்டர் நிதமயக் கோதி லமுதே நினைக்குருகிப்
பிறிவற் றிருக்க வேண்டாவோ பேயேற் கினிநீ பேசாயே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ மாசிமீ கவ

## மதபக்தி.

பக்தியில் கடவுள் பக்தி, குருபக்தி, பெற்ருேர் பக்தி, தேசபக்தி, இராஜபக்தி எனப் பலவிதமுண்டு. இவற்றில் கடவுள் பக்தியே யாவற்றினும் சிறந்தது. மதபக்தியில்லை யெனின் கடவுள் பக்தி யில்லையாகும்; மதம் என்ருல் அறிவு என்றும் ஒரு அர்த்தம் உண்டு. மதி என்பதற்கும் அறிவு என்று அர்த்தமுண்டு; "அறிவை யறிவது பொருளாமே" என்று அருணகிரிநாதர் கூறியுளார். ஈஸ்வரன் அறிவுக்கறிவா யிருப்பவன் என்று வேதங் கூறுவதால் ஈசுவரனை யறிவதே மதம் என்ருகிறது. மதம் என்ருல் சேர்த்தல் என்று பொருள் என்றும், ஆதலால் ஆத்மாவைப் பரமாத்மாவோடு சேர்ப்பதற்கே மதம் என்று பெயர் எனவும் வேருெரு அர்த்தமும் கூறப்படுகிறது. எவ்வாற்ருனும் ஈசுவரனை யறியும் மார்க்கத்திற்கே மதம் என்பது பொருள் என்று விளங்குகிறது. இதனுல் மார்க்கம் என்ருலும் மதம் என்றே பொருள் படுகின்றது.

இவ்வுலகுக் கெல்லாம் கடவுள் ஒருவரே யென்பதும், ஆயினும் அவரையறிய ஏற்பட்டிருக்கும் மதங்கள் என்ற மார்க்கங்கள் பல வென்பதும் யாவருமுணர்ந்த விஷயங்களே. எல்லா மதங்களாலும் பாதிக்கப் படுபவர் அந்த ஒரு கடவுளே; அந்தந்த மதங்களைத் தாபித்த மகான்களும் அந்த ஒருகடவுளின் அருள்பெற்றவர்களே. ஆயினும், அவர்கள் ஏற்படுத்திய மார்க்கங்களின் கொள்கைகளில் பேதங்க ளிருக்கின்றன. ஆனல் எல்லா மதங்களின் மூலநோக்கமும் கருத்தும் மட்டும் ஒன்றே; மற்றபடி வெளி விஷயங்களில் வேறுபாடுக ளிருப்பானேனெனில், காலத்தையும் இடத்தையும் கருதியே அந்த வேறுபாடுகள் உண்டாயின. சில கொள்கைகள் நேர்மாருகத் தோன்றுவதும் அதனுலேயே; அதற்கு ஒரேயொரு திருட்டாந்தம் மட்டும் கூறுகிருேம்.

மேல் நாடுகளிலுண்டான கிருஸ்துமதம், இஸ்லாம் மதங்களில் விக்கிரகாராதனை கண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு நடந்து கொண்டிருந்தது விக்கிரகாராதனையன்று. அது பதுமையாராதனையாகும். அக்காலத்தில் அங்கிருந்த ஜனங்கள் கடவுள் எங்கும் நிறைந்த சர்வவியாபியாகிய ஏகன் என்ற உணர்ச்சியின்றி அவரவர்கள் பிரியப்படி பதுமைகளைச் செய்து அவைகளே கடவுளென மதித்து வந்தார்கள். ஆகையால் எங்கும் நிறைந்த ஒரேகடவுள் இருக்கிறார்; இவைகள் கடவுளல்ல என்ற உணர்வை யவர்களுக்குண்டாக்குவதற்காக அப்பதுமை யாராதனையை யடியோடொழிக்க வேண்டியது அவசியமாக விருந்தது. கடவுளின் சொரூபமே யின்னதென்று அறியாமல் சடப்பொருளையே கடவுளென எண்ணியிருந்தவர்களுக்கு, கடவுள் அழியாத சித்சொரூபம், அகண்டம் என்ற உணர்வை யுண்டாக்க வேண்டியதற்காகக் கண்டமான எதையும் உருவமுள்ளதையும் கடவுளெனக் கருதுவதே பாபம் என்று கூறினால்தான் அவர்கள் அதை யடியோடு விட்டு விடுவார்கள். அதற்காகவே அவர்கள் அவ்வாறு கூறினார்கள்.

நமது நாட்டிலே அனாதிகாலந் தொடங்கியே, ஆரம்பத்திலேயே கடவுளின் இலக்கணம் பூரணமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது கடவுள் ஏகம், நித்தியம், நிர்ம்மலம், சச்சிதானந்தம், சர்வவியாபி, அந்தரியாமி என்றும், உருவம், அருவம், உருவாருவம் ஆகிய யாவற்றையும் கடந்தவரென்றும், மனவாக்குக் கெட்டாதவரென்றும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது.

அத்தகைய கடவுளைத் தியானிப்பதும், பாவனை செய்வதும், அவரிடம் மனதை நிலைக்கச்செய்வதும் எல்லாராலும் ஆகக்கூடிய கர்ரியமல்ல; மனம் நாமரூபத்திலேயே பழகியுள்ளதாதலால் ஆரம்பத்தில் கடவுளை உருவமுடையதாகப் பாவித்து அவரிடம் மனதை நிலைக்கச் செய்யப்பழகினால் அன்பு முதிர்ந்தபின், மனம் அருவத்தில் நிலைக்கும் என்பதற்காக, சொரூப ஆராதனை விதிக்கப்பட்டது.

அவ்வாறு கூறப்படும் திரிமூர்த்திகள் முதலியவர்களின் உருவம், நிறம், அங்க இலட்சணங்கள், சின்னங்கள் யாவும் அகண்ட பரிபூரண சொரூபமாகிய கடவுளின் இலட்சணங்களைக் குறிப்பிடும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றன. மந்திரத்தால் கடவுளின் அருள் விலாசம் விக்கிரகங்களில் உண்டாகச்செய்து அவ் விக்கிரகங்களே பூசிக்கப் படுகின்றன. அவையும் அகண்டமாகிய கடவுளின்

நினைவுமனதில் நிலைப்பதற்கு ஓர் குறியாகக் கருதப் பட்டவையே யாகும். அவற்றை முன்னிலையாக வைத்துக்கொண்டு அகண்ட பரிபூரண சொரூபியாகிய ஆண்டவனே யென்று தியானிக்கிறோமே யன்றி அந்த விக்கிரகமே கடவுள், வேறு கடவுளில்லையென்று நாம் கருதுவதில்லை. 'எங்கும் நிறைந்தகடவுள் அவற்றிலும் விளங்குகிறார்' என்ற ஒருவரும் மறுக்கொணு உண்மையை நம்புகிறோம். இது ஒரு படியேயன்றி முடிவான நிலையல்ல. ஞானநிலையாகிய மேல் படியில் செல்லக்கூடிய பக்குவம் வந்தவர்கள் இந்த உருவ உபாசனையை விட்டுவிடவேண்டு மென்றே திட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் நமது மதத்தில் விக்கிரகாராதனை விலக்கப்படவில்லை. அதற்குமாறாக அது அவசியமானதாகவும் மிக்க பயனளிக்கத் தக்கதாகவும், மந்த மதியினர்க்கும் ஈஸ்வரபக்தியை யுண்டாக்கி அவர்களைப் படிப்படியாய் மேலேற்றக் கூடியதாகவும் இருக்கிறது. இவ்வாறு கடவுள் ஒருவராயினும் மதங்கள் பலவாக விருப்பது இயற்கையே, உலக சிருஷ்டியின் இயற்கையே வேறுபாடன்றி ஒரேவிதமல்ல; இவ்வாறு பலவேறு சமயங்கள் உலகிலிருந்துகொண்டேதா னிருக்கும். உலகம் முழுமையும் ஒரேமதமாகவேண்டும் என்று கருதுவோர் ஒருபோதும் ஆகாத காரியத்தைச் சிந்திப்போராகவும், உண்மை யறியாதோ ராகவுமே கருதப் படுவார்கள்.

உலகில் பலமதங்கள் இருந்தும் இவற்றில் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகளும், துவேஷங்களும், சச்சரவுகளும் இல்லாமலில்லை. அப்படியிருக்க உலகமுழுதும் ஒரே மதமாவது நடக்கக்கூடிய காரியமோ? ஒருபோது மில்லை.

இவ்வாறிருப்பதால் அவனவன் எச்சமையத்தில் பிறந்தானே அச்சமயத்தின் இயற்கையை விடாமல், அதில் நம்பிக்கையும் பக்தியும் வைத்து அதில் கூறியபடி கடவுள் பக்தியோடு நடந்துகொண்டால் முடிவான அழியாநிலைக்குச் செல்லும் பாதையில் முன்னேறுவான் என்பதில் ஐயமில்லை. ஆனால் பிறமதத்தை நிந்தித்தல்கூடாது. எல்லாமதங்களால் கொண்டாடப் படுவதும் ஒரே கடவுளாதலால் எம்மதக்கடவுளைத் தூஷித்தாலும் தன் சொந்தமதத்தில் கூறப்பட்ட கடவுளைத் தூஷித்தபலனையே யடைவான். குமரகுருபரர் முதலிய நமது பூர்வீக மகான்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் முதலிய எல்லா ஆன்றோர்களின் கொள்கையும் இதுவேயாகும்.

ஒருவன் தன் மதத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து அதன் க்ஷேமத்தைக்கருதி ஒழுகுவதே மதபக்தி என்பதாம். இது ஒன்றினால்தான் மனிதன் மற்ற எல்லாப்பிராணிகளிலும் சிரேஷ்டமானவனாகிறான். மதபக்தி யில்லாதவன் மனிதப் பதவிக்கு அருகனாகமாட்டான்.

இனி நமது மதத்தைப் பற்றியும், நமது மதபக்தியைப் பற்றியும் சிந்திப்போம்:

நமது மதம் கடல்போன்றது. கடல் எல்லா நதிகளையும் தன்னுள் ஏற்று அடக்கிக் கொள்வது போல், நமதுமதம் மற்றெல்லா மதங்களையும் ஏற்றுக்கொள்ளும். எல்லாமதங்களின் கருத்துகளும் இதில் அடங்கி யிருக்கக் காணலாம்.

கடவுள், ஆன்மா, மோட்சம் என்பவைகளின் இலட்சணங்களைப்பற்றியும், ஞானத்தை யடையும் மார்க்கத்தைப் பற்றியும், நமது மதநூல்களில் பூரணமாகக் கூறப்பட்டிருக்கிறது; அதாவது, இவற்றைப்பற்றி அதிகமாக இன்னும் ஒரு வார்த்தையேனும்கூற இடமில்லை. அதோடு கூறப்பட்டவையாவும் மகான்களாகிய ரிஷிகள் தங்கள் ஞானநேத்திரத்தால் பிரத்தியட்ச அனுபவமாகக்கண்டபின் கூறப்பட்டவை. ஆத்மா, கடவுள், என்ற பதங்கள் எல்லா மதநூல்களிலு முண்டு; யாவரும் அவற்றைக் கூறுகிறார்கள்; அவையுண்டென்றும் நம்புகிறார்கள். அப்படியுண்டெனில் அவற்றைப் பிரத்தியட்சமாக அறியவேண்டு மன்றோ. இன்றேல் நம்பி என்னபயன்?

கற்கண்டு இருக்கிற தென்று நம்பி, வாயால் "கற்கண்டு கற்கண்டு" என்று கூறுவதால் மட்டுமே கற்கண்டின் சுவையை யனுபவித்ததாகுமே? கற்கண்டிருக்கு மிடமறிந்து அதை யெடுத்து வாயிற் போட்டுக் கொண்டாலன்றோ ருசிதெரியும். அதுபோல ஆன்மாவையும் பரமான்மாவையு மறிந்தாலன்றோ மோட்சம் சித்திக்கும். அவை யிரண்டையும் நமது முன்னோர் பிரத்தியட்சமாகக் கண்டே அவற்றை யறியும் மார்க்கங்களைக் கூறியிருக்கிறார்கள். இத்தேகத்தி லிருக்கும்போதே மோக்ஷ நிலையைக் காணத்தக்க மார்க்கங்களை யருளி யிருக்கிறார்கள். மனிதனுக்குள் மறைந்திருக்கும் அளவுகடந்த ஆன்மசக்தியை யவர்கள் அறிந்து அதனால் அபூர்வ காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அம்மார்க்கங்களை யெல்லாம் நமக்குக் கூறியிருக்கிறார்கள். ஆன்மா அழிவதில்லை, ஆன்மா நித்தியானந்தன் என்ற உண்மையைப் பிரத்தியக்ஷத்தி லறிந்து

மரணபயமற்று அந்த அழியா ஆனந்தத்தை யனுபவிக்கும் மார்கங்களை நமக்குக் காட்டி யிருக்கிறார்கள்.

அந்தோ ! இத்தகைய அரியமதத்தைப் பெற்றிருந்தும் நாம் அதில் எத்தகைய பக்தி வைத்திருக்கிறோம் ? அநாதிகாலந் தொடங்கி மதமே நமக்கு யாவற்றிலும் பிரதானம். நமது இலௌகிக நடக்கைகள் யாவும் மதசம்பந்த முடையவைகளே. எந்த விஷயத்தில்பிரவேசிப்ப தாயினும் அதில் மதத்தின் மணம்வீசும். நமதுநாடு தெய்வசிந்தனை குடிகொண்டது. ஞானத்தின் பிறப்பிடமானது. ஒரு சிறுபிள்ளையைப் பள்ளியில் விட்டு அது முதல் முதல் 'அ' என்ற அக்ஷரத்தைக் கற்குமுன்பே, "ஹரி ஓம்" என்று கூறி, குருவின் பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கொள்ளும் முறைமையே நம்முன்னோர் ஏற்படுத்திய மார்க்கம்.

இதனால் ஈசுவர சிந்தனையும் குருபக்தியுமே முதலில் கற்பிக்கப்படுகிறது. பிறகுதான் பாஷைக் கல்வி. அந்தோ ! இப்போதோ, கழுதையின் உருவத்தை முதலில் காட்டி இதென்ன வென்று உபாத்தியாயர் சிறுவனைக்கேட்டு அவன் முன்னே 'கழுதை' என்று கூறினால் பிறகு "இது க" என்று கற்பிக்கப் படுகிறது. அந்தோ ! என்ன தான் கலிகால மெனினும் நம்மவர்க்கு இத்தகைய மதிமயக்கம்கூட உண்டாகுமோ. நமது நாட்டில், அதிலும் நம்மக்களுக்கு, மதபக்தியும் தெய்வ சிந்தனையும் வரவரக் குறைந்துகொண்டே போகிறது. தெய்வ சிந்தனை குறைந்தால் நாம் மற்ற விஷயங்களில் எவ்வளவு முயற்சி செய்தாலும், நம் தாய்நாடு ஓர் போதும் முன்னேற்றமடையாது. உலகில் பல மதஸ்தர்களும் அவரவர்கள் மதத்தை விர்த்திசெய்பச் சதா முயன்ற வண்ணமாக விருக்கிறார்கள்.

நமது நாட்டிலோ மதத்தைக் காப்பாற்று வதிலேயே சிரத்தையின்றி யிருக்கிறோம். அதிலும் அந்நிய மதத்தினர் நம்மவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுக்கத் தந்திரமான பெருமுயற்சிகள் செய்யும் போது, நாம் இவ்வாறு அசிரத்தையாக விருப்பது மதத்துரோகமாக வல்லவோமுடியும். மதத்தைக் காப்பாற்றுவதற்கும் பரவச்செய்வதற்கு மென்றுமே பூர்வத்தில் மடாலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தோ! அத்தகைய மடாதிபதிகளே இவ்விஷயத்தில் சற்றும் கவலையின்றி யிருந்தால் என்னென் றுரைப்பது. அந்தோ ! நம்மவர்களில் பெரும்பாலர் புறச்சமயத்திற்குப் பலிகொடுக்கப்பட்டால் பிறகு இம் மடாலயங்களின் கதியென்னாகும் என்பதை இவர்

கள் சிந்திக்கவில்லை போலும். சீடர்களின்றேல் குரு ஏது ? குடிகளில்லாவிட்டால் அரசன் ஏது ?

பெற்றோர்களேனும் தம் மக்களுக்கு மதக்கல்வி அவசியம் என்பதை யினியாவது துணர்ந்து, தம் மக்களுக்கு மதக்கல்விபயிற்றுவிக்கத்தக்க முயற்சி யெடுத்துக் கொள்ளும் வண்ணம். எல்லாம் வல்ல கருணாநிதியாகிய பரம்பொருள் அருள் புரியப் பிரார்த்திக்கிறோம். ஓம் தத் ஸத்.

---

## வீட்டு நெறி.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவி டற்கு"

பொய்யா மொழியாராகிய நாயனாருளிய மேற்படி குறட்பா பெரும்பாலோரறிந்ததே. இது மிகச் சிறியவாக்கிய மெனினும், இதில் அம்மகான் அடக்கியுள்ள பொருள் சொல்லொணாப் பெருமையுடையது. நாயனார் குறளில் முப்பாலே கூறினார் என்று கூறப்படினும், இதில் மோக்ஷமார்க்கத்தைச் சுருக்கியருளினா ரெனலாம். அதை நம் சிற்றறிவிற் கெட்டிய அளவு சுருக்கமாய்க் கூறுவாம்.

"பற்றற்றான் பற்றினைப் பற்றுக, அப்பற்றைப் பற்று விடற்குப் பற்றுக" என்பது அநுவயம்.

**பற்றற்றான் பற்றினை** :—எல்லா வஸ்துக்களையும் பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை.

**பற்றுக**:—இதுவே நன்னெறி யென்று மனத்துட் கொள்க.

**அப்பற்றை**:—(அவ்வாறு மனத்துட் கொண்ட) அதன்க ணுபாயத்தை.

**பற்றுக**:—மனத்தாற் செய்க.

**பற்று விடற்கு**:—அநாதியாய் வந்த உடம்பிற் பற்றினை விடுதற்கு.

**அதாவது**.—"எல்லா வஸ்துக்களையும் பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனத்துட்கொண்டு, அதன்கண் கூறியுள்ள தியானாதி யுபாயங்களை மனத்தால் செய்க—இப்படிச் செய்வது அநாதியாக உன்னைப்பற்றியுள்ள உடம்பின் பற்று விடுதற்காக." என்று பரிமேலழகர் உரையருளியுள்ளார். இக்குறள் நமது பற்றை யொழித்து நாம் வீடடையும் நெறியைக் கூறுகிறது.

### இதனால் நாம் அறியக்கிடப்பது.

பகவான் ஆகாயம்போல் எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறம்புமாக நிறைந்து நின்றாலும் எதிலும் தாக்கற்றவர். நாம் நம்மைப்பற்றியுள்ள பற்

றுக்க ளொழிவதற்காக அத்தகைய இறைவனைப் பற்றிக்கொள்ளவேண்டும். இதற்கு மர்க்கட நியாயம் என்று கூறுவர். மர்க்கடம் என்றால் வானரம். வானரம் தன் தாயைப்பற்றிக்கொண்டு தாய் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அந்தரத்தில் தாண்டும் போதும், மரத்தி லேறும்போதும், பாய்ந் தோடும்போதும் விடாமல் பற்றிக்கொண்டே யிருக்கும். நாம் பகவானை யவ்வாறு பற்றுவது எவ்விதம்? பகவான் பக்திவலையிற் படுவோன் என்று மணிவாசகப் பெருமானாதிய பல ஆன்றோர் கூறியுளர். ஆதலின் பக்தியாலேயே அவனைப்பற்ற வேண்டும். ஒரு பொருளை நாம் பற்றிக் கொண்டோ மென்றால் அப்பொருளும் நாமும் இரண்டு பொருள்களாகப் பிரியப்பட்டு நிற்காமல் ஏகமாய் ஒரே பொருளாக ஆகிவிட்டிருக்கவேண்டும். வேறு வேறாயிருக்கிற வரையில் நாம் ஆண்டவனைப் பற்றியவர்களல்ல. அவரைப் பற்றுவதற்கு முன்னே அவர் இருக்குமிடம் தெரியவேண்டும். ஆண்டவன் எங்கிருக்கிறார் எனின், அவர் எங்கும் சர்வவியாபியாயுள்ளவர். ஆகையால் நமது உள்ளத்திலேயே யுளர். அவரையன்றி நாமில்லை. நாம் கடவுள் நமக்கன்னியம் என்று கருதும்வரையில் கடவுள் நமக்கு வெகுதூரத்தி லிருக்கிறார். ஆகையால் அவரையெங்கும் தேடிச்செல்ல வேண்டிய கஷ்டமில்லை. அவ்வாறு உள்ளத்திலுள்ளவரை யெவ்வாறு பற்றலாம்?

முதலாவது அவரை யறிந்தாலன்றிப் பற்ற முடியாது. ஏனெனில் அவர் சடப்பொருளல்ல, சித்சொரூபி யாதலின் அறிவாலேயே யவரைப் பற்றவேண்டும். இதனால் அவரை யறிவதே பற்றுதலாகும். எப்படி ஆண்டவனையறிவது? ஆண்டவனை யுள்ளபடி யறியவேண்டு மாயின், ஆரம்பத்தில் எந்தவழி சென்றாலும், கடைசியில் ஒருவழியிருக்கிறது. அவ்வழியாய் அவரை எவரும், யாராயினும் சரி, அறியலாகும். அதாவது தன்னை யறிந்தால் தலைவனை யறியலாம். தன்னை யறிந்தவனுக்கு ஆண்டவன் பற்றுதவிர வேறு பற்றிராது. ஏனெனின் தன் உண்மையை யறிந்ததும் தேகமுதல் நாமரூபத் தோற்றமாகிய யாவும் அநர்த சடதுக்க மென்றும் யாவும், பரமானசொரூபமே யென்றும் தெரிந்துவிட, ஆன்மா பரமான்மாவோடு ஐக்கியத்தை யடையும்.

> "தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
> பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே"

என்று தாயுமானவர் கூறியருளினர்.

தன்னையறிய மனம் ஒடுங்கவேண்டும்; சகுண உபாசனையால் மனதை யடக்கவேண்டும்.

இவ்வாறு ஆண்டவனை யேன்பற்ற வேண்டு மெனின், நமது அநாதிப் பற்று ஒழிவதற்காக. நமக்கென்ன பற்றிருக்கிறது? நமக்குள்ளபற்று அகப் பற்று புறப்பற்று என்று இருவிதமுண்டு. "நான், எனது" என்றும் அவற்றைக் கூறலாம்.

1. அகப்பற்று:—நான் என்னும் அகங்காரமே அகப்பற்று; அது தேகத்தையே தான் என்றபிமானிப்பது.
2. புறப்பற்று:—தேகத்திற்குப் புறம்பாகிய தீரம், புத்திரர், மனை, பொன், மாடு முதலியவைகள் என்னுடையவை என்று அபிமானித்தல்.

இவற்றில் அகப்பற்றே புறப்பற்றிற்குக் காரணம். அகப்பற்று அஞ்ஞானத்தாலுண்டாயிற்று. தன் சுயசொரூபத்தை மறந்ததே அஞ்ஞானம். ஆதலின் ஆன்மாவாகிய தன் சுயசொரூபத்தைத் தரிசித்தாலே அகப்பற்று ஒழியும். அப்போது ஆன்மாவை யன்றி மற்ற நாமரூபத் தோற்ற மனைத்தும் சடமாகிய அநித்தியப் பொருள்களே யென் றுணர்வதால் இச்சையொழியப் புறப்பற்றும் ஒழியும். இக்குறட்பா வால் இன்னொரு விசேஷம் நாம் அறியவேண்டி யிருக்கிறது. "உன்பற்றொழிய ஈசனைப்பற்று" என்று கூறியிருக்கிறதே யன்றி—"ஈசனைப்பற்ற உன்பற்றைவிடு" என்று கூறியிருக்க வில்லையென்பது கவனிக்கத்தக்கது.

சிலர் "இல்லறத்தில் பெண்சாதி பிள்ளைகளோடு கூடவிருந்தால் ஞானத்திற்கு எங்கே முயல்வது. யாவும் விட்டுவிட்டுச் சந்நியாசம்பெற்றாலன்றோ ஞானம்வரும்" என்று கூறிக்கொண்டு ஒன்றையும் விடமுடியாமலும் ஜன்ம சாபல்யத்திற்குச் சற்றும் முயலாமலும், அரிதிற்கிடைத்த இவ்வுத்தமஜன்மத்தை வீணாக்கி விடுகிறார்கள். மனம் ஒருபற்றைச் சுலபத்தில் விடாது. வெளிப்பற்றாகிய பெண்டு பிள்ளையாதிகளை விட்டுவிட்டுக் கானகஞ்சென்றிருந்தாலும் மனதின்கண்ணுள்ள பற்று ஒழியாதவரையில் அவன் சந்நியாசம் ஒருபயனும் அளிக்காது. ஞானம் உதயமாயின் அந்த அனுபவம் முதிரமுதிர எல்லாப் பற்றுகளும் தன்னையறியாமலே (நித்திரை வந்தவன் கையிலுள்ள பொருள் அவனையறியாது தானே நழுவி விடுவதுபோல்) ஒழிந்துபோம்.

அகப்பற்றொழிந்தவன் இல்லறத்தி லிருந்தபோதினும் அவன் ஞானியாவன். கர்மம் அவனையணுகாது. ஒரு செடியை வேரோடு பிடுங்கிவிட்டுப் பிறகு அதை மண்ணில் சொருகிவைத்தால், அது கொஞ்சக்காலம் வரை பார்ப்பவர்க்குப் பச்சைச் செடிபோல் காணப்படினும் சீக்கிரத்தில் உலர்ந்தழியும். இதைப்போலவே அகப்பற் றொழிந்தோன் பார்வைக்கு வெளிப்பற்றுகளை யுடையான்போல் காணப்படினும் சொல்பகாலத்தில் அவனது சகல பற்றுகளும் ஒழிந்துபோம்.

புறப்பற்றை மட்டும் விட்டுவிட்டு ஒருவன் அடவியிற் சென்றிருந்தாலும் அகப்பற் றொழியாதவரையில் அவன் பற்றற்றவனாகான். அவன் மனம், இல்லறத்தில் உலகபோகங்களை யனுபவித்துக்கொண் டிருக்கிறவனுடைய மனதைவிட அதிகமாக உலக போகங்களை நாடும். ஒரு மரத்தின் கிளைகளை மட்டும் வெட்டிவிட்டால் அது பட்டமரம்போல் தோன்றினும்

கொஞ்சக்காலத்திற்குள் துளிர்த்துத்தழைத்து முன்னிருந்தபடியே அகன்ற விருக்ஷமாய்விடும். அதைப்போலவே புறப்பற்றைமட்டும் விட்டவன் சற்று தவறின் இல்லறத்தானிலும் மிக்கத் தாழ்ந்த நிலையடைவான்.

" மனத்தகத் தழுக்கறுத மௌனயோக ஞானிகள்
வனத்தகத் திருப்பினும் மனத்தகத் தழுக்கறுர்
மனத்தகத் தழுக்கறுந்த மௌனயோக ஞானிகள்
மூலத்தடத் திருப்பினும் மனத்தகத் தழுக்குறுர். "

ஆதலின் ஞானமடைய முயல்வோன் ஆரம்பத்திலேயே இதை விட வேண்டும் அதை விடவேண்டும் என்னும் கவலைகொள்ளவே வேண்டாம். அடையவேண்டியதை யடைய முயற்சித்தால் விடவேண்டியது தானே விட்டுப்போம். அதற்காகவே பற்றுவிடற்கு, பற்றற்றவனைப் பற்றிக்கொள் என்றுரைக்கப்பட்டது.

நாம் அப்பரம்பொருளை யறியவே முயலவேண்டும்; அதை யறிந்து பற்றின், அதாவது அந்த நிலையி னிற்பின் வினையொழியும்; வினை யொழியச் சகல பற்றுக்களும் தாமே நீங்கும்.

" ஒருவ வேண்டு மனைத்துமென வுன்ன வேண்டா வினைநீங்கில்
ஒருவு மனைத்தும் வினையுளதே லொன்றி மேவு மற்றவையை
ஒருவல் பற்ற லவையைவிடுத் துள்ள படியே முடியுமெனச்
சொரூப நாமே யெனத்திடமாய்த் தோற்று மதற்கே முயன்றிடுக "
(குமாரதேவர் சாத்திரம்)

மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஈசுவரனிடம் பக்திசெலுத்தி யவனருளைப்பெற முயல வேண்டும். இன்றேல் மாயையாகிய அஞ்ஞான மென்னும் திரையை நீக்கி ஆன்மாவை யறிய முடியாது. பூரணமான பக்தி செலுத்துவது அரிதாதலின் நமது முயற்சியும் வேண்டும். அதாவது பக்தியும் சாதனையும் வேண்டும். இதுவே மனிதஜன்மம் பெற்றதா லடைய வேண்டிய பலனையடையும் மார்க்கமாகும்.

ஓம் தத் ஸத்.

பக்தர்க்கடியன்.

---

## ஓர் கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ, ஆனந்தபோதினி பத்திரிகாசிரியர் அவர்கட்கு.

துன்மதி௵ மார்கழி௴ தங்களால் பிரசுரம் செய்யப்பட்ட "ஆனந்த போதினி" 233-வது பக்கம் "ஹிந்து மதத்தினருக்கு ஓர் எச்சரிக்கை" என்னும் தலைப்பின் கீழ்க்கண்டிருக்கும் விஷயத்தைக் கவனிக்க அடியில்கண்ட விஷயத்தைத் தங்கட்கு தெரிவிக்காமலிருக்க என்மனம் துணியவில்லை. மேலும் ஷை விஷயத்தின் கடைசியில் விஷயத்தைக்குறித்துப் பின்னுமுள்ள அபிப்பிராயங்களைத் தெரிவிக்க இடங்கொடுத் திருப்பதால், அடியிற் கண்ட விஷயத்தைத் தங்களுக்கெழுத என்மனம் துணிவுற்றது.

சுமார் 4, 5 வாரங்கட்கு முன் காஞ்சிபுரம் U. F. C.M. High School நடந்த "ஸண்டேகிளாசில்" 8-வது வகுப்புப் பிள்ளைகட்கு Mr. G. பிரகாசம் B. A. L. T. என்னுமோர் கிறிஸ்துவ உபாத்தியாயர், கிறிஸ்துமத விஷயமாகப் பாடம் போதித்தார். அதில். 'சாது சுந்தர்ஸிங்' என்பவரின் ஜீவிய சரித்திரம், விவரமாகச் சொல்லப்பட்டது. வட இந்தியாவில் "சாது சுந்தர்ஸிங்" என்னுமோர் ஹிந்து, ஹிந்து மதத்தில் முழுநம்பிக்கை யுள்ளவரா யிருந்து கிறிஸ்துமதத்தைப் பின்பற்றினவரை, மிகக்கொடுமையாக நடத்திவந்தார் என்றும் ஓர் நாள் அவர் கிறிஸ்துமதத்தி னுண்மையை அறிய "பைபில்" என்னும் சத்திய வேதத்தை வாசித்ததாகவும், அதனால் கிறிஸ்துமதத்தி னுண்மை அவருக்கு வெளிப்பட்டதாகவும், அதின் பேரில் தனக்கு "இயேசு கிறிஸ்து" பிரத்தியக்ஷம் ஆகும் பக்ஷத்தில் தான் கிறிஸ்து மதத்தை அனுசரிப்பதாக விரதம் பூண்டு ஜெபம்செய்யுங் காலத்தில் கடைசியில் கருத்த, இருண்ட மேகம்போல் இயேசு கிறிஸ்து பிரத்தியக்ஷமானதாகவும், அது முதல் கிறிஸ்துமதத்திற்கு அடியாராகிவிட்டதாகவும் கூறினர். "அவர் ஹிந்துவாயிருந்த காலத்தில் கிறிஸ்துமதத்தினரை இம்சை செய்தது எண்ணுதற்கு அரிதானது. கொளுத்திய பைபிலுக்குக் கணக்கே இல்லை. அத்தகைய "சாது சுந்தர் சிங்கே" கிறிஸ்து மதத்தின் அருமையைத் தெரிந்து ஷை கிறிஸ்துவுக்குத் திருத்தொண்டு புரியலானர்" என்றும் தான் அவரை நேரில் பார்த்ததாகவும் கூறி அடியிற்காணும் விசனகரமான விஷயத்தையும் சொல்லிவிட்டார். அதாவது, "ஆகையால் இக்கிளாசில் யாராவது இந்தக் கிறிஸ்துமதத்தை அனுசரிக்க விரும்புகிறவர்கள் எழுந்து நிற்கலாம்" என்று சொன்னர். எந்தப் பிள்ளைக்கும் ஹிந்துமதத்திற்குத் துரோகஞ்செய்ய மனந்துணியாததால், தங்களை இப்பள்ளியில் சேர்த்ததற்காகத்தங்கள் பெற்றோர்களை நிந்தித்துக் கொண்டு, எழுந்து நிற்கவில்லை. ஆனல் இமை கொட்டியவரும் யாரும் இல்லை.

1921ஞ டிசம்பர்மாதத்திலுங்கூட இத்தகைய அக்கிரமங்கள் நடந்துவருவதால் பிள்ளைகளின் பெற்றோர்கள் மிக்க எச்சரிக்கையாகச் சரியான பள்ளிகளில் தங்கள் மக்களைக் கற்பிக்கவேண்டும். அந்த வகுப்பிலுள்ள யாராவ தொருவன் புத்தியின்மையினலாவது, புத்தி யீனத்தினலாவது, புத்தி ஸ்வாதீன மின்மையினலாவது, எழுந்து நின்று இருப்பானயின் அவன் எவ்வளவு சீக்கிரத்தில் கிறிஸ்துவனக்கப்பட்டு அவன் அடையப்போகும் கதிகளை இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் தாங்களே நினைத்துப் பார்க்கின் தெரியவரும்.

ஷை சண்டேகிளாசைக் கவனித்த 8-வது வகுப்புப் பிள்ளைகளைக் கேட்கின் இன்னும் விவரமாகத் தெரியவரும்.

☞ குறிப்பு.—நமது ஹிந்து சகோதர சகோதரிகளும், பெற்றோரும் மேற்கண்ட விஷயத்தை வாசித்துக் கவனிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

'சாது சுந்தர்ஸிங்' என்பவர் ஹிந்துமதத்தில் நம்பிக்கைவைத்து விட்டிருந்து பிறகு அதைவிட்டு விட்டார் என்பதும், பிறகு பைபிலைப்பார்த்ததே அவருக்கு கிருஸ்துமதத்தில் உண்மை வெளிப்பட்டு விட்டிருந்ததால், பிறகு இன்னும் ஏசுகிருஸ்து பிரத்தியக்ஷமாக வேண்டுமென்று ஏன் பிரார்த்தித்தா ரென்பதும், அப்போது கருத்த இருண்ட மேகம்போல் தோன்றியதை ஏசுவாக நம்பிக்கொண்டா ரென்பதும், ஒரு பக்கமிருக்கட்டும். கிருஸ்துமத உபாத்தியாயர் தம் வேலையைத் தாம்செய்கிறார். நம்மவர் நடக்கையைப்பற்றியே நம்மனம் மிக வருந்துகிறது.

அந்தோ! இதை வாசிக்கும்போது நம்மவர் மனம்பதைக்கு மென்பதில் சந்தேகமோ. ஆனால் இது யார்குற்றம்? நாமே வலிய நம் மக்களுக்கு மரணத்தினும் கொடிய ஆபத்தை யுண்டாக்குகிறோம். இதுவோ பெற்றோர் தம்மக்களைப் பாதுகாக்கும் முறை? அந்தோ! பன்முறை இவ்வாறு கிருஸ்துவர்கள் நம்மவர்களை மயக்கித் தங்கள் மதத்திற்கு இழுக்கும் சம்பவங்களைக்கேட்டும் கண்டு மிருந்தும், நம்மவர்க்கு இன்னும் அறிவுவிளங்காமலிருப்பது மிக்க விசனிக்கத்தக்க காரியமேயாகும். இது பட்டப்பகலில் கையில் தீபத்தை வைத்துக்கொண்டுநமது மக்களைக் கிணற்றில் தள்ளுவது போ லிருக்கிறதே யன்றி வேறில்லை. அந்நியமதம் போதிக்கப்படுவதை யறிந்திருந்தும், அத்தகைய பாடசாலைகளுக்கு நமது மக்களையனுப்பிப்பிறகு பறிகொடுத்துப் பரதவிப்பதால் என்னபயன்? நம்மக்களுக்குக் கல்வி கற்பிக்க வேறு பாடசாலைகளில்லையா?

சகோதர சகோதரிகளே! இனியேனும் உங்கள் மக்களைப் பாதுகாப்பதில் எச்சரிக்கையா யிருங்கள். "பிள்ளை வரத்திற்குப் போய்ப் புருடனைப் பறிகொடுத்தாள்" என்பதுபோல் கல்வி கற்பிக்க எண்ணி மக்களைப் பறிகொடுத்துக் கொடிய பாதகத்திற்கு ஆளாகாதீர்கள். மதவிஷயத்தில் நாம் அசிரத்தையா யிருந்தால் பெருங்கேட்டுக் குள்ளாவோம் என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆங்காங்குள்ள அறிவாளிகள் நம்மவர் புறச்சமயத்தாருடைய மாய போதனைக் குள்படாவண்ணம் தடுக்கச் சங்கங்களை யேற்படுத்த முயற்சி யெடுத்துக் கொள்வார்க ளென்று நம்புகிறோம். இன்னும் இவ்விஷயத்தில் அசட்டை செய்தால் ஹிந்துக்கள் என்ற பெயருக்கு அருகராகமாட்டோம். நம் முன்னோர் சாபத்திற் குள்ளாவோம். எச்சரிக்கை! எச்சரிக்கை!!

பத்திரிகாசிரியர்.

---

## ஹிந்துமத ஆசாரமும் நூதன இயந்திரமும்.

### வர்ணாஸ்ரமம் கிரமமா?

1. பிராமண குலத்தில் உதித்தவன் அநுஷ்டானக் குறைவினால் இழி குலத்தில் சேர்க்கப்படுவனா?

2. இழிகுலத்தில் பிறந்தவன் அநுஷ்டானத்தால் மட்டும் பிராமணனுவனு?

இந்த வியாஸம் இலேசாய் வரையப்படுவதல்ல. எனினும் யான் எடுத்துக் கொண்டதின் காரணம் முக்கியமாய், நூதனமாய், மேற்குறித்த விஷயத்தைப் பொறுத்து, கண்டுபிடிக்கப் பட்ட இயந்திர மொன்று நமது கண் கூடாய் ஏற்பட்டதால்தான்.

நமது மதீ ஆசாரங்களும், வர்ணுஸ்ரம தர்மங்களும், வேதம் உண்டாயது முதல் கையாடப் பட்டு வருகின்றன. நமது முன்னோர், சுருக்கத்தில் நமது பாட்டனர்காலம்வரைகூட, அவைகள், அநேகமாய் அநுஷ்டிக்கப் பட்டு வந்தன. ஆங்கிலக்கல்வி நம் நாட்டில் ஏற்பட்ட தினமுதல், நம் நாட்டுப்பழக்கம் க்ஷீணமடையத்தொடங்கித் தற்காலம், மேல்நாட்டார் வழக்கம் அதிகமாய்ப் பிடிபட்டு வருகிறது. விவரிக்கில் மிக விரியும். ஆகையால், சுருங்க உரைக்கில், நாம் 'சுகத்தை விடுத்து வியாதியைத் தேடிக்கொண்டோம்' இது உலகறிந்த விஷயம். நமது நாட்டில் பிரத்தியக்ஷம்; எவரும் மறுக்கார். தற்கால வாலிபர்களும், யௌவனப் பருவத்தாரும், எவ்வளவு வளர்கிறார்க ளென்பதும், எவ்வளவு பராக்கிரமம், தைரியம், வீரியம், தேஜஸ் முதலியவை உடையவர்களென்றும், நமது தகப்பனர், பாட்டனர் களின் அவ்வவ்வயதுகளில் இருந்த ஸ்திதியுடன் இவர்கள் ஸ்திதியை ஒப்பிட்டுப் பார்க்கில் விளங்கும். அவ்வளவுதூரம் போவானேன். தற்காலம் ஜீவித்திருக்கும்; 60—70—வயதுக் கிழவர் என்ற பெயருற்றவர்களின் பராக்கிரமமும், மனேதைரியமும், இவர்களுக்கு உண்டா? ஏன் இவ்வளவு வித்தியாசம்? ஒரே வீட்டில், உண்டு, உடுத்து, சுகித்துவரும் இருவருக்குள் இத்தனைபேதம் என்னை? நமது வாலிபர்கள் படிப்பில் அதிக புத்தி செலுத்தியதால் இளைத்ததாக அநேகர் கொள்கை. நான்கு சாஸ்திரம், பதினெண் புராணம், தர்க்கம், மீமாம்சை, நிகண்டு, முதலியவைகளை மனப்பாடமாகப் படித்து உணர்ந்தவர்களைக் காட்டிலுமா இவர்கள் அதிகம் படித்து விட்டார்கள்? ஒருகாலும் இல்லை. முன்னோர்களுடைய திடகாத்திரமும், புத்தி தீக்ஷண்யமும், எள்ளளவும் தோற்கடிக்கப் படமாட்டா. பின்னை யாது காரணத்தால் அவர்கள் சந்ததியார் இத்தனை கேடுற்றார் கள். முக்கியமாய் அவர்களின் அநுட்டானங்களை அங்கீகரியாமல் நிராகரித்து விட்டதுதான் அதற்குக் காரணம். இனியாவது தவறுதலை உணர்ந்து தங்களால் கூடியவளவு ஒழிந்தபொழுதில் ஆசாரங்களை அநுஷ்டிப்பாராக.

எனது முகப்பில் குறிக்கப்பட்ட நூதன இயந்திரம் யாது? இதுவரை அதைப்பற்றிப் பேசவில்லையேயென்று வினவ வேண்டாம். அதைச் சுருக்கமாய் விவரிப்பேன்.

அமெரிக்கா கண்டத்தில் தியோபால்ட் ஆப்ரஹாம்ஸ் (Theobald Abrahams) என்பவர் அந்த இயந்திரத்தைக் கண்டுபிடித்தவராவர். கண்டு

பிடித்தவர் இந்தியரல்லவாதலால், ஒருமதத்தைச் சிறப்பித்தற் பொருட்டாவது, ஒரு கூட்டத்தைத் தாழ்த்தற் பொருட்டாவது கூறப்பட்டதெனக் குறைகூற இடமில்லை. மேலும் அந்த இயந்திரத்தால் அநேக விதமான சோதனைகள் செய்ததில் எல்லாப் பரீக்ஷையிலும் உண்மை வெளிப்பட்டு இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. இந்த இயந்திரம் மனிதனுடைய பரம்பரையைக் காண்பிக்குங்கருவி. எத்தனையுகமாயினும், அவர் சொல்லுகிறபடி ஒருவனுடைய சந்ததியாரை, எவ்விடத்தி லிருப்பினும், இந்தயந்திரத்தால் பரீக்ஷித்துக் கண்டுபிடிக்கலாம். மேலும் ஒருவனுடைய வயதை அநேக வருஷங்களுக்கு முன் நிர்ணயிக்கமுடியும். வயது, ஜாதி, வகுப்பு (ஆண், பெண்) முதலியவையும் கூறற்பாலன என்று அவர்வரைகிறார். ஒருஜாதிக்குப் பிறந்தவன் அநுஷ்டான யோக்கியதா முறையால் மட்டும் மற்றொரு சாதிக்குரியவனாக முடியாதென்று இதனால் கண்டிப்பாகருசுப்படுத்துகிறார். மேற்படி அநுஷ்டானத்தாலும் குணத்தாலும் தங்குலத்தில் மேம்பாடுடையவனேயன்றிப் பிறிதுகூற இடமில்லை. ஓர் தகப்பனுக்குப் பிறந்த சந்ததி மற்றொருவனுக்குரியதென்று கூறிய ஒரு வியாச்சியத்தில் ஆப்ரஹாம், தம் இயந்திரத்தால், யாருக்குரிய சந்ததி யென்பதையும் தெரியப்படுத்தி யிருக்கிறார். ஆகையால் பிராமணருக்குப் பிறந்த சந்ததி எந்த அநுஷ்டானக் குறைவாலும், எவ்விதக்கிரியையாலும், குலத்தில் தாழ்ந்தவனாகான். மேலும், ஆத்திரேய கோத்திர சந்ததியார், அத்திரிமகரிஷியின் சந்ததியார் என்பதைத்தற்காலம் ரூபிக்கலாகும். ஒரேகோத்திரத்தாரின் இரத்தத்திலிருந்து, இவ்விதம் கண்டு பிடிக்கப்படுகிறது. சகோத்திர விவாகமும், மற்றும் பலவித கட்டுப்பாடுகளும் தற்காலம் புராதன அநாகரீகமென ஒருங்கே தள்ளப்படுகின்றன. மேற்படி வர்ணாஸ்ரம தர்மங்களும் நிலைகுலைந்த தன்மையவாயின.

'Down with the Caste System', Be away with stupid marriage customs' 'வர்ணாஸ்ரம தர்மங்களை விட்டுவிடுங்கள்' 'கலியாண ஒழுங்குகளை விட்டுத்தொலையுங்கள்' என்றும், இவைகள் நசித்துப்போகும் வரை நமது இந்தியா விருத்தியடையா தென்றும் கூறிக் குடி கெடுக்கும் அநேகர் இரவல்பேச்சைக் கேட்டவர்களேயன்றித் தங்கள் புத்தியால் ஆராய்ந்தறிந்தவராகார். "சுடச்சுட உரைப்பார் தம்மவர், இனிய இனிய உரைப்பார் ஊரார்" என்ற பழமொழிக் கேற்ப, நமது முன்னோர்கள் நமக்குக் கெடுதி செய்ததாகவும், தாங்கள் அவைகளை நிவர்த்தித்து, நன்மை பயக்கவந்தவர்களாகவும் நினைத்து இவ்விதக்கொள்கையை, பிறரிடம் கடன்வாங்கி, தாங்கள் கெட்டது போதாது, எல்லாரையும் கெடுக்க முயலுகிறார்கள். தற்காலம் பெண் கல்வியைப்பற்றிய பேச்சும், பெண்களுக்கு ராச்சியபாரத்தில் சம அதிகாரமும், விதவா விவாகமும் இன்றியமையா தனவென உரைப்பவரும், இவர்கள் எல்லாரும் நம்தேச சத்துருக்களாவரே யன்றி, நம்தேச நன்மைக்கு உழைப்பவராகார். இனியாகிலும், அவ்விதப் பேச்சைவிட்டு, நமது புராதன வழக்கத்தைக் கைக்கொண்டுய்வார்களா.

நாளுக்குநாள் விருத்தியடைந்து, உலகம் நம்மைப்பார்த்து, அநுஷ்டித்தகாலம் போய், நம்மைநாமே தாழ்த்திக்கொண்டு, பிறர் உதவியை, அனுவசியமாய் நாடி, துர்ச்சன சகவாஸத்தால் கெட்டோம். பன்றியுடன் சேர்ந்தகன்றும் மலமுண்ணும் என்பதுபோல் சற்சங்கத்தில் வாழ்ந்து வந்த நாம் அதைவிட்டு, "விளக்கை நோக்கிச்செல்லும் விட்டில் பூச்சிபோல்" மதிமயங்கி, துர்ச்சனரோடு நாளுக்குநாள் சிநேகம் அதிகரித்துத் தற்கால நிலைமைக்கு வீந்திருக்கிறோம். இன்னும், அச்சகவாஸம் வேண்டு மென்பாரை யான் என்கூறுவது. "உடம்புக்கு பால்குடிக்காமல், ஊருக்குப் பால் குடிக்கும்" தன்மை இனி யொவ்வாது. கூடியசீக்கிரம், நம்மை நாமே சீர் திருத்திக் கொள்ளாவிட்டால், வீணாக விரும்பாத அதிக கஷ்டத்திற்கு இரையாவோம்.

நான் இயந்திரத்தின்குணத்தை மட்டும் கூறினேனன்றி, அதின் சூக்ஷ்மத்தைப்பற்றி இதுகாறும் வாளாவிருந்ததைப்பற்றி மன்னிக்கவும். எவரும் அவ்வகை இயந்திரம் யாதென விரும்புவர். ஆகையால் அதைமட்டும் சுருக்மாய் அடுத்த வியாசத்தில் விவரித்து விடுப்பாம். தொடரும்.

Dr. S. Ramakrishna,
M. D. (A) G. B; V. C., Jalgaon.
(East Kandsh Berar.)

---

## கைவல்ய நவநீத வசனம்

(264-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ ஊன்றிப்பார்க்கின் யாவும் ஆன்மசொரூபமே யென விளங்கும். இப்பிரபஞ்சம் மனத்தால் சிந்தித்துண்டானதே. அதாவது மனதினின்றே பிரபஞ்சம் உதித்தது. மனமின்றேல் பிரபஞ்சமின்றாகும். உண்மையில் மனம் ஜடம். அப்படி யிருக்க அது எப்படி சலிக்கிறதெனின், அது ஆன்மாவின் சக்தியாலேயே அசைகிறது. ஏககாலத்தில் 'நான்' என்பதையும் மனம் என்பதையும் காணமுடியாது. 'நான்' என்பது தன்னை மறந்தாலே, மனம் என்பது முளைக்கிறது. மனதின் சலனத்தைநிறுத்தி அதன் அங்குரமாகிய நினைப்பு என்பது, எங்கிருந்து முளைக்கிறதென்று ஆழ்ந்து நோக்கின், அதன் பிறப்பிடம் 'நான்' என்ற ஆன்மாவே யென்று விளங்கும். தாயுமானவர் மனதை நோக்கி "நின் ஜன்மதேயத்தில் நீ செல்லல்வேண்டும்" என்றார். அவரே,

"விரிந்த மனமொடுங்கும் வேளையி னுனைகப்
பாந்த வருள்வாழி பதியே பராபரமே" (அதாவது மனம்

ஒடுங்கிய விடத்தில் ஆன்மதரிசனம் தோன்றும்) என்றும் அருளினர். ஆகையால் யாவும்; ஆன்மாவையன்றி யில்லை. எல்லாம் ஆன்மசொரூபமே.

அலை திவலை நுரையனைத்தும் நீரேயாகும். சட்டி, குடம், என்ற மண்பாண்டங்கள் பல உருவங்களையும் பல பெயர்களையும் உடைத்தா யிருந்தாலும் யாவும் மண்ணேயாகும். இவ்வாறு யாவும் ஆன்ம சொருபமேயென அனுபவமா யறிந்தவனே ஞானியாகும்.]

எங்கும் நிறைந்த பரிபூரண சொருபமாகிய சித்தே நான் என்ற உறுதியை மறவாதிருந்தால், என்ன எண்ணினாலும் என்னசெய்தாலும் அவற்றால் ஒரு கெடுதியும் உண்டாகாது. நித்திரையி னின்றும் விழித்தபின், கண்ட கனவு பொய்யென்று தானே தோன்றி விடுவதுபோல் யாவும் மித்தையாகும். "பரமானந்த பரிபூரணனே ஆன்மாவாகிய நான்" என்பதே சத்தியம்.

[ஆத்ம தரிசனத்தால், தான் ஒரு கிரியையும் செய்பவனல்ல, ஒன்றோடும் சம்பந்தப்பட்டவனல்ல, என்று உணர்ந்து அத்திட அனுபவத்தோடு இருப்பவனுக்கு 'நான்' என்ற அகங்காரமே யில்லையாதலின், கனவுபோல் உலக விவகாரங்களைச் செய்யினும் அவற்றால் ஒரு பாதகமு முண்டாகாது. ஆனால் வாயால் மட்டும் நான் பிரம்மம் என்று சொல்லிக்கொண்டால் போதாது. மருந்து மருந்து என்று கூறிவிட்டால் வியாதி நீங்கிவிடாது, மருந்தை யருந்தினாற்றான் நீங்கும்.

"சத்து மசத்துஞ் சதசத்து நீயல்ல
சுத்தசிவ நீ யென்று சொல்லினான்-மொய்த்தெழுந்த
கல்லாலின் கீழிருந்து கதிகாண நால்வர்க்குஞ்
சொல்லாமற் சொன்ன துரை" (வள்ளலார்)

சிலர் நாம்பிரம்மம் என்று தெரிந்து கொண்டால் அவ்வளவேபோதும், பிறகு என்ன செய்தாலும் பாபமில்லை என்று எண்ணிக் கொள்கிறார்கள். இத்தகையோரால்தான் சிலர், வேதாந்தம் "நாமே கடவுள், நம்மையன்றி வேறுகடவுளில்லை" என்று கூறுகிறதெனத் தவறெண்ணம் கொண்டிருக்கிறார்கள். வேதாந்தம் அவ்வாறு கூறவில்லை. முதலில் ஈசுவரனிடம் பக்தி நிலைத்து அவனை யடைவதாகிய ஒரு பாக்கியமே வேண்டுமென்ற அடங்கா ஆவல்கொண்டு, இவ்வுலக போகங்களும், இந்திரன் பதவி முதலிய விண்ணுலக போகங்களுமாகிய யாவும் அநித்தியம், ஜடம், துக்கம் என்று வெறுத்து, ஆசை ஒழிவால் மனவொடுக்கம் வந்து, ஈசுவரனை யெப்படியடைவதென்ற ஏக்கங்கொண் டிருக்கும் ஒருவனுக்கே வேதாந்தம் "கடவுள் எங்கோ தூரத்திலில்லை. எங்கும் நிறைந்த அவர் உன்னுள்ளேயே யிருக்கிறார்; நீ அவரிலேயே யிருக்கிறாய். நீ அவர் அம்சமே. நீயுன் ஆன்மாவைக் கண்டால் ஈசுவரனுடைய உண்மைச் சொருபத்தைக் காண்பாய். ஏனெனில் இரண்டும் இனத்தில் ஒன்றே. நீயவனில் ஒரு பாகமே; நீ யந்தச் சச்சிதானந்தப் பிரம்மமே" என்று கூறியதேயன்றி வேறில்லை. அகம் பிரம்மாஸ்மி - அதாவது "ஆன்மாவே பிரம்மமா யிருக்கிறது" என்ற

வேதவாக்கியப்படி "நாம் பிரம்மசொரூபமே" என்ற திடம்வராமல், நாம் வேறு பிரம்மம் வேறு என்ற பேதபுத்தி யிருக்குமட்டும் ஒருபோதும் முத்தி கூடாது.

"மாசறப் படித்தா னேனு மயலறத் தெளிந்தா னேனு
மாசறத் துறந்தா னேனு மஞ்செழுத் துணர்ந்தா னேனு
மீசன்வே றியான்வே றென்னு மிருமையுங் கழலா னாகிற்
பாசமுங் கழல்வ தின்றும் பதித்துவந் தானு மின்றே"

(வள்ளலார்)

கடலோடு சேர்ந்த குடநீர் கடலேயாவதன்றிக் குடநீராய்ப் பிரிந்து நிற்பதில்லை. பாலோடு சேர்ந்த நீர் பாலேயாகும். அதுபோல் பிரம்மத்தோடு சேர்ந்த ஆன்மா பிரம்மமேயாகும்.

"பாலோடு சேர்ந்தநீர் பாலாகு மாங்கதுபோல்
வாலறிவ னைச்சேர்ந்த மன்னுயிர்கள்—வாலறிவன்
றானாகி நிற்பதல்லாற் றண்டாத வைம்பாச
வானாகி நில்லா வுவந்து"

"அரசன் மகனரச னாகிநின்றாற் போலப்
பரமசிவ னிற்றோன்றும் பல்லுயிரும்—பரம
சிவனாகி நிற்பதலாற் சீவனாய் நில்லா
சிவனாணை யுள்ளே தெளி"

(வள்ளலார்)

அந்த நிலையை யொருவன் அடைந்தபின் "நான் பிரம்மமா யிருக்கிறேன்," என்று கூறத்தக்க நிலையல்ல அது. அப்படிக் கூறுகிறவன் கண்டிப்பாய் அந்த நிலையிலில்லை. அங்கு 'நான்' என்பதே யில்லை யெனில், "நான் பிரம்மமா யிருக்கிறேன்" என்பது எங்குளது. சிரச்சேதம் செய்யப்பட்டவன் தலை "என் தலையை வெட்டி விட்டார்கள்" என்று கூறுமோ. அதுபோல பிரம்மத்தோடு கலந்தநிலை ஒருவரும் இன்னவிதமானதென்று கூறொணாதது. ஒன்றோ இரண்டோ என்று கூற வழியில்லாதது. மனதிற்கெட்டாத தெனின் வாக்கால் கூறுவ தெங்ஙனம்.

குருவும் அதையடைய வழிகாட்டுகிறாரே யன்றி நேரில் அந்த நிலையைக்காட்ட முடியாது. குரு ஆன்மாவை யறியும் வழியைக்காட்டுகிறார். எவனும் தனக்குள் இருப்பதைத் தானே யறியவேண்டும். ஆன்மாவை யறிந்தபின் பரமான்மாவை யவனவனே யறிந்துகொண்டு அந்த ஆனந்தக்கடலில் முழுகித் 'தான்' என்ற போதம் அற்று ஐக்கியநிலைபெற வேண்டியதே.

"நீயற்ற அந்நிலையே நிட்டை * * *"

"நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவேசும்மா
தானமரும் நிலையதுவே சத்தியம் சத்தியம் * * *"

(தாயுமானவர்)

சாத்திர ஆராய்ச்சிசெய்து ஞானத்தை யடைவது விசேஷமே யெனி னும், சாத்திரங்களை வாசிப்பதால் மட்டுமே ஞானம் கிட்டிவிடாது. சாத்திர ஆராய்ச்சி செய்தாலும் செய்யாவிடினும் தனியே உட்கார்ந்து அப்பியாசம் செய்யவேண்டும். ஜடத்தின் மூலமாகவே சித்தையறிய வேண்டும்; மாயை யையறிந்த பின்பே பிரம்மத்தை யல்லது ஆன்மாவை யறியலாகும். மாயை யென்பது மனதையன்றி வேறில்லை யாகையால், மனதை யெதிரிட்டறிந் தால் மனம் மறைந்துவிடும். ஒரு செடியின் வேரைப் பிடுங்கிவிட்டால் அச்செடி யெவ்வாறு அழிந்துபோமோ அவ்வாறே, மனம்முளைக்குமிடத்தை யறிந்தால் மனதின் உருவம் நாசமடையும்; ஆன்மதரிசனம் கிடைக்கும்; அதாவது நமது உண்மைச் சொரூபம் விளங்கும். அந்தச் சிற்சொரூபமே நாம் என்ற உறுதி மறவாதிருந்தால், அங்கு நான் எனதென்ற பற்றும், நாம் ஒன்றைச் செய்கிறோம் என்ற உணர்ச்சியும் இல்லையாதலால், வினைவழியே எக்கிரியை நிகழினும் அது ஆன்மாவைப் பாதிக்காதென்பதாம். அந்த நிலையில் உலகத்தோற்றாவு கனவுபோற் றோன்றும்.

"காண்பதுங் கேட்பதுங் கருத்துஞ் சொப்பனம்
பூண்பதும் புனைவதும் புசிப்புஞ் சொப்பனஞ்
சேண்படு நாகமுஞ் செகமுஞ் சொப்பனம்
வீண்படு மிவைக்கெலாம் விசுத்த ஞனரோ" (வள்ளலார்) ]

(சீடன் தனது திருப்தியைவெளியிடல்)

நான் கடந்த பல ஜன்மங்களில் உடலையே நானென்று நம்பியிருந் தேன். இழிந்த பிறவிகளாயும் உயர்ந்த பிறவிகளாயும் இருந்த அவையனை த்தும் இப்போது சற்குருவினருளால் கானலிற்றோன்றும் சலம்போல் மித் தையெனக்கண்டு ஆன்மாவே நானென நம்பி விசுவாசித்து ஈடேறினேன்.

[பல ஜன்மங்களில் என் நிஜசொரூபத்தை நானறியாமல் தேகமே நானென்ற அஞ்ஞானத்தில் அழுந்திக்கிடந்து, பிறப்பதும் இறப்பதுமாகிய பவசாகரத்தில் அல்லற் பட்டுக்கொண் டிருந்தேன். இப்போது குரு வழி காட்ட, தேகாதிப் பிரபஞ்சமனைத்தும் கானல் நீர்போல் ஆரோபமாகிய மித்தையென்றுணர்ந்து, என் நிஜசொரூபத்தை நான் அறிந்து, ஜனனமரண மற்ற பேரின்ப நிலையடைந் துய்ந்தேன் என்பதாம்.] (தொடரும்)

சீடன்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(272-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தி.—பக்தியில் கடவுள்பக்தி, குருபக்தி, பெற்றோர் பக்தி, இராஜபக்தி, தேசபக்தி என்பவை முக்கியமானவைகள்.

(1) கடவுள் பக்தி.—புண்ணிய பூமியெனப் புகழ்பெற்ற நம் தாய்நாடு தெய்வபக்தியில் எப்போதும் குன்றாதது; அறிவாளி, மூடன், மந்தன்

அயோக்கியன் யாவரிடத்தும் தெய்வபக்தியுண்டு. கள்ளன்கூட ஒரு கோயிலுக்குச் சென்று, அங்குள்ள சொரூபத்தை நோக்கி "சுவாமி! இந்த இரவு நான் களவாடச் செல்லுமிடத்தில் நல்ல பொருள்களகப் பட்டால் காலையில் தங்களுக்கு நூறு தேங்காய்கள் உடைக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்துகொண்டுதான் செல்கிறான். இவ்வாறு நம் நாட்டில் வித்வான்முதல் மூடன் வரையில் இப்பக்தியும், அடிக்கடி கடவுளைச் சிந்திக்கும் வழக்கமும் நிலைத்திருப்பதன் காரணம் இயற்கையான எப்போதும் அழியாத சத்தியத்தையே யாதாரமாக உடைய நமது ஆருதிமதத்திலுள்ள கொள்கைகளே யாகும்.

மாணவ நண்பர்களே! உங்களில் பலர் அன்னியமதம் போதிக்கப்படும் பாட சாலைகளில் வாசிக்கிறீர்கள். கலிகாலக் கொடுமையால், பெற்றோர்கள் உங்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற ஒன்றைமட்டும் கருதி, நமது செய்கை "கோபுரங்கட்டக் கோயிலையிடிப்பதுபோ லிருக்கிறது" என்பதைக் கருதாமல், உங்களை யப்பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். அந்தோ! உங்களுக்கு நமது மதத்தைப்பற்றிய கல்வியே போதிக்கப்படாததால் அப்பாடசாலைகளிலுள்ள அந்நியமத போதகர்கள் உங்களை நோக்கி, "உங்கள் இந்துமதம் அநாகரீகமான மதம்; நீங்கள் கல், மண், உலோகங்களால் செய்யப் பட்ட உருவங்களைத் தெய்வமென்று வணங்குகிறீர்கள்" என்பது முதலான துர்ப்போதனைகளைச் செய்தால், நீங்கள் மதிமயக்க மடைகிறீர்கள். ஏனெனில் நமது மதத்தில் ஏற்படுத்தப்பட் டிருக்கும் இவ்விஷயங்களின் உண்மை யென்ன என்பது உங்களுக்குத் தெரியாது. இந்த ஏற்பாடுகளால்தான் நமது நாட்டில்தெய்வபக்தி நிலைத்திருக்கிறது. அவற்றை யீண்டு சுருக்கமாக விவரிக்கிறோம். ஆதலின் அன்பார்ந்த ஹிந்துவாலிப சகோதரர்களே!

## கீழ்க்கண்டவற்றைக் கவனமாய் வாசியுங்கள்.

கடவுள் இலட்சணம் நமது மதத்தில் பூரணமாய்க் கூறப்பட்டிருக்கி றது. அதைப்பற்றி நமக்கு அன்னியமதத்தினர் போதிக்கத்தக்கது ஒன்றுமே யில்லை. கடவுள் ஒருவரே; அவர் அருவம், உருவம், உருவாருவம் என்றவைக ளுக்கு அப்பாற்பட்டவர் என்றே நமதுவேதம் கூறுகிறது. ஆனால் இன்ன விதமானது இப்படிப்பட்டது என்று கூற வொண்ணாததை யொருவன் எப்படிச் சிந்திக்கலாகும். மனமோ ஒரு உருவமும் ஒரு பெயரும் உடைய பொருள்களையே சிந்திக்கவும் விசுவசிக்கவும் கூடியது. ஆரம்பத்திலேயே கடவுளை யருவமாகச் சிந்தித்து அவரிடம் பக்திசெலுத்தக்கூடிய அதிகூக் கும அறிவுடையோர் மிக்க அரிது. ஆதலின் சாதாரணமான எல்லாரும் எவ்வாறு ஈசுவரனிடம் அன்புசெலுத்தி யவனருள் பெறுவது?

அதனாலே கடவுள் செய்யும் சிருட்டி, திதி, சங்காரம் என்ற மூன்று தொழில்களுக்கும் தக்க மூன்று பெயர்களும் மூன்று உருவங்களும் கற்பிக்

கப்பட்டிருக்கின்றன. அந்த உருவங்களில் ஒன்றை மனதில் சிந்தித்து, அதையே எங்கும் நிறைந்த பரம்பொருளெனக் கருதி அதனிடம் பக்தி செலுத்தினால், ஈசுவரன் அருள்பெற்று அதன் மூலமாய்ப் பரம்பொருளின் உண்மைச் சொரூபத்தைத்தரிசித்து அவரோடு இரண்டறக்கலந்து விடுவதாகிய நித்தியானந்த பதவியை யடையலாகும். கடவுள் சர்வசக்தியுடையவராதலால் நாம் அவரை யெந்தச்சொரூபமாகச் சிந்தித்துப் பக்திசெலுத்துகிறோமோ அந்த உருவமாய் நமக்கு அவர்தரிசன மளிக்கிறார். அவர் சர்வவல்லவர். அதைத்தான் அனேகம் பக்தர்கள் மகான்களின் சரித்திரங்களில் பரமசிவன் இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய்த் தரிசனமளித்தாரென்றும், மகாவிஷ்ணு கருடவாகனத்தின்மேல் இலக்குமி சமதேராய்த் தரிசனமளித்தா ரென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

பகவான் நமது அன்பையும் எண்ணத்தையும் கருதிப் பலன் அளிக்கிறாரேயன்றி மற்றபடி நமது வெளிச்செய்கையைமட்டும் கருதியல்ல. நமது நிஜசொரூபத்தையறிய விரும்பி அதன் பொருட்டு நமது அருள்பெற நம்மையொரு உருவமாகப் பாவித்து அன்புசெலுத்துகிறார்கள் என்று அவர் அறிவார். அவர் சர்வக்ஞர். ஆகையால் உருவமாகப் பாவித்தல் பாபம் என்றும் அதற்குக் கடவுள் கோபிப்பார் என்றும் கருதுவது பெருந்தவறு. இது விஷயமாக இதே சஞ்சிகையில் வெளிவந்திருக்கும், 'மதபக்தி' என்ற முதல் வியாசத்தில் பத்திரிகாசிரியர் கூறியிருப்பதை வாசித்துணர்ந்தால் நன்கு விளங்கும். முதலாவது அவ்வாறு கருதுவதுயுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாததாகும். அரசருடைய உருவத்தை வெண்கலத்தால் செய்து வெட்டவெளியில் வைத்து அதற்கு மரியாதை செய்கிறோம். அதற்காக அரசர் "நாம் எதிரிலில்லாததால் நம்மேலுள்ள அன்பால் நமது பிரசைகள் நம்போன்ற ஒரு உருவத்தைச் செய்துவைத்து, அதற்கு மரியாதை செலுத்துகிறார்கள்" என்று சந்தோஷ மடைகிறாரேயன்றிக் கோபிப்பதில்லை. மனிதன் அறிவிலும் சர்வக்ஞரும் கருணையே யுருவாகியவருமான ஈசுவரன் குறைந்த அறிவும் நீதியு முடையவர் என்று எங்கேனும் கருதலாகுமோ? இந்தச் சொரூபவணக்கத்தாலும், ஆங்காங்கு கோயில்கள் அமைத்து அவற்றில் ஈசுவர சொரூபத்தைப் பிரதிஷ்டைசெய் திருப்பதோடு அவற்றிற்குத் தக்ககாலங்களில் பூஜைகளும் உத்சவங்களும் நடந்தேறி வருவதாலும், நம் நாட்டிலுள்ள சுத்தமூடர்கள் கூட அடிக்கடி கடவுளைச் சிந்திக்கவும், பூஜிக்கவும் வழியேற்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடுகளால் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் ஈசுவரன் விஷயத்தில் ஈடுபடுகின்றன. கோயிலைக் காண்பது, பிரதட்சணம் செய்வது, உத்சவங்களைப்போய்ப்பார்ப்பது, அவை நடைபெறுவதற்கு அவசியமான வேலைகளைச்செய்தல் இவையாவும் அனேக ஜனங்கள் கடவுளைச் சிந்திக்கும்படி செய்வதற்கே பெருந் தூண்டுதல்களாகவிருக்கின்றன. இதனால் சொரூப ஆராதனை யெவ்வளவு அவசியமானதென்பது உங்களுக்கு விளங்கும்.

ஆகையால் கண்மூடித்தனமாய் அன்னிய மதஸ்தர்களின் போதனையால் மயங்கிவிடாதீர்கள். நமதுமதத்தில் எள்ளளவு குற்றங்கூறவும் இடமில்லை யென்பதைப் பூரணமாய் நம்புங்கள். உங்களை மயக்கித் தம்மதத்திற்கு இழுக்கமுயல்வோர் குற்றமல்லாததைக் குற்றமென்று நீங்கள் நினைக்கும்படிசெய்ய அப்படிக் கூறுவார்கள். அதனால் மயங்கிவிடாதீர்கள். அப்படியும் உங்கள் மனம் எதிலேனும் கலக்கமடைவதாயின், உடனே அதைப்பற்றி மத ஆராய்ச்சியுடைய நம்மவர்களிடம் வினவினால் கட்டாயம் உங்கள் சந்தேகம் நீங்கிவிடும்.

நண்பர்களே! இப்போதிருந்தே தினந்தோறும் கொஞ்சக்காலத்தைக் கடவுள் பக்தியில் செலுத்துங்கள். அதனால் உங்களுக்குப் பலவித நன்மைகள் உண்டாகும். அவரவர்களுக்கு எந்தெந்தச் சொரூபத்தில் விருப்பமோ அததை யுபாசியுங்கள்.

குருபக்தி.—சுமார் நாற்பதைம்பது வருடங்களுக்கு முன்வரையில் நசநாட்டு மாணவர்களிடம் ஆரம்பத்தி லிருந்தே குருபக்தி யிருந்துவந்தது. அந்தோ! இப்போதோ மாணவர்களிடத்தில் குரு என்ற எண்ணமேயில்லை. கல்வியும் அதற்குத்தக்க மாதிரியாகத்தான் ஆய்விட்டது. உபாத்தியாயர் கடவுள் பக்தி என்ற விஷயங்களைப்பற்றி, அதாவது மதபோதனை கொஞ்சமேனும் செய்யாவிட்டால் அவரிடம் குருபக்தி ஜனிப்பது அரிதாகும். நண்பர்களே! அத்தகைய விஷயங்களைப் போதிக்கும் உங்கள் தாய்ப்பாவை யுபாத்தியாய ரிடமேனும் நீங்கள் குருபக்தி வைக்கவேண்டியது அவசியமாகும். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற ஔவைப் பிராட்டியார் திருவாக்கின்படி உபாத்திமாரைக் கடவுள்போல் மதித்து பக்தியோடொழுகுவதே நலமாகும். பெற்றோர் பக்தியைப்பற்றி முன்னமே கூறினோம்.

160929

இராஜபக்தி.—குடிகளின் க்ஷேமாபிவிர்த்தியில் கருத்துவைத்துத் தன்னுயிர் போலத் தரணியிலுள்ள மன்னுயிர்களைப் பாதுகாக்கும் அரசரிடம் கடவுளுக் கிரண்டாவதான பக்திசெலுத்த வேண்டும்.

தேசபக்தி.—கடவுள்பக்தி வேண்டு மென்பது உலகமுழுமையும் ஒப்புக்கொண்டு ஒழுகுவதாகும். பெற்றோர் பக்தியும், ஏறக்குறைய அவ்வாறே. குருபக்தி நமது நாட்டிலேயே விசேஷமாயுண்டு; மற்ற நாட்டார் உபாத்தியாயரை மரியாதையோடு நடத்துவதாக விருந்தாலும், நமது நாட்டிலுள்ளதுபோல் தெய்வமாகக் கருதவேண்டும் என்று நினைப்பதில்லை. ஆனால் தேசபக்தியோ தற்காலம் மற்ற எல்லாநாடுகளைக் காட்டிலும் நம் நாட்டிலேயே மிகக் குறைவாயிருக்கிற தெனலாம். நம்தேசம் க்ஷேமமடைய வேண்டும் என்ற எண்ணம் வைத்துத் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான காரியங்களை நம்மாற் கூடியவரை செய்வதே தேசபக்தியாகும். சுயநலங்கருதாது பொது

நலமாகிய காரியத்தைச் செய்யவேண்டும். தேசபக்தி யில்லாதவன் பெற்றதாய்க்குத் துரோகம் செய்யும் சண்டாளன் போன்றவன்.

நம் தாய்நாட்டிற் பிறந்தவர்களிடம் (ஜாதிமதபேதம் பாராமல்) அன்பு வைத்தல், நம் தாய் நாட்டுப்பாஷையில் அன்புவைத்தல், நம் தாய்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களிடம் விருப்பமும் அபிமானமும் வைத்தல் இவையாவும் தேசபக்தியுடையோர் கடமைகளாகும். இவர்களே தேசாபிமானிகள். நம் நாட்டில் இப்போது இவற்றிற்கு நேர் மாறாய் நடப்போர் பலர் இருக்கின்றனர். இவர்கள் தாய் நாட்டிற்குத் தீங்கிழைக்கும் துரோகிகளே யாவார்கள். இத்தகையோர் போதனைகளைக் கொடிய விஷம்போல் வெறுத்துத் தள்ளவேண்டும்.

ஒற்றுமை.—நண்பர்களே ! ஒற்றுமையைப் பற்றிப் பாடபுத்தகங்களில் வாசித்தே யிருப்பீர்கள். ஆனால் அதன் அருமை அப்போ துங்களுக்குப் பெரும்பாலும் புலப்படுவதில்லை. நாம் முன்னேற்ற மடைவதற்கு ஒற்றுமையே மிக்க பிரதானமானது. ஒற்றுமையே ஜெயம், பிரிவினையே அபஜயம், அழிவு. எவரும் தம் எதிரிகளின் கூட்டத்தை யழிக்கவேண்டுமாயின் அந்த எதிரிகளுக்குள் பிரிவினை யுண்டாகும்படிச் செய்வதையே முக்கிய ஆயுதமாகக் கருதுகிறார்கள். பிரிவினை யுண்டானால் அவர்களுக்குள் துவேஷம், பொறாமை, அதன்மேல் சச்சரவுகள் தாமே ஏற்பட்டுவிட, அவர்கள் சுலபமாய் அழிக்கப்படுகிறார்கள்.

ஆகையால் ஜாதிபேதம், மதபேதம், முதலிய எவற்றாலும் பிரிவினையை யுண்டாக்கிக் கொள்ளாதீர்கள். பிரிவினையை யுண்டாக்குவோர் எவராயினும் சரி, அவர்கள் நம்மைக்கெடுக்க எண்ணங் கொண்ட விரோதிகளென்றே கருதுங்கள். அவர்கள் கெட்ட எண்ணம் கொள்ளாமல் அறிவீனத்தால் அப்படிச் செய்தாலும், அதனால் தீங்கேநேரிடு மென்பது சத்திய அனுபவமாதலால், அவர்கள் நமக்குத் தீங்குசெய்தவர்களே யாவார்கள். ஆதலின் நண்பர்களே ! ஒவ்வொருவரும் தாம் தாம் மேலோங்கிவர முயற்சி செய்யவேண்டியது அவசியமே யாயினும், ஒரு வகுப்பார்மேல் ஒருவகுப்பார் துவேஷம் கொள்ளாது பரஸ்பர விசுவாசம் வைத்துப் பிரிவினைக்கு இடங்கொடாமல் ஒற்றுமையைக் கைவிடாதிருங்கள்.

(தொடரும்)

சீடன்.

---

## மாதர் நெறிகள்

(274-ம் பக்கத்தொடர்ச்சி)

20. கற்பு.—சகோதரிகளே ! கற்பென்றால் என்ன என்பது அனேகம் மாதர்களுக்குச் சரியாக விளங்கவில்லை யெனலாம். புருடனுக்கு நடக்கையால் துரோகம் (அதாவது விபசாரம்) செய்யாம லிருப்பதுதான் கற்பு என்று எண்ணுகிறார்கள். அது ஒரு ஸ்திரீசெய்யக்கூடிய எல்லா

வித பாபங்களிலும் முதன்மையான பாபச் செயலாகும். ஒருத்தி அதைமட்டும் செய்யாம லிருந்துவிட்டால் கற்புடைய மாதாய் விட மாட்டாள்.

இந்த ஒரு நடக்கையில் மட்டும் நெறிதவறுதிருக்கும் மாதரில் சிலர் கணவர் தங்கள் விருப்பத்திற்கு மாறுன ஒரு காரியத்தைச் செய்தால், அல்லது தாங்கள் விரும்பியதை யளிக்காவிட்டால் மனம் போனபடி பின்னுல் அவர்களை வைகிருர்கள். அண்டை யயலிலுள்ளாரிடம் " இந்தச் சாவான் அழிந்து போவான், அவனைப் பாடையில்வைக்க..., " என்று தங்கள் கோபம் அடங்குமட்டும் சபிக்கிருர்கள். இத்தகையோர் ஒரு விஷயத்தைப்பற்றிச் சபதம் செய்யவோ, அல்லது எதிர்காலத்தில் இன்ன சங்கதி நிகழப்போகிற தென்று தீர்க்கதரிசனம்போல் கூறவோ, ஒருவரைச் சபிக்கவோ சந்தர்ப்பம் நேரும்போது தம் முன்தானையைப் பிடித்துக்கொண்டு "இந்த முன்தானை ஒருவனுக்கே போட்டதாயின்......" என்று சபதம்செய்கிருர்கள். இது கற்பாய்விடாது.

ஔவைப்பிராட்டியார் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று அருளி யிருக்கிருர்கள். அதாவது கணவனது வார்த்தைக்கு மாறு கூருமல் நடப்பதே கற்பாகும் என்பதாம். நாயனுர்

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை;"

என்று அருளியுள்ளார். கணவனையே கடவுளாக எண்ணித் தொழுபவள் பெய் என்ருல் மழை பெய்யும் என்பதாம். அதாவது கணவனைத் தெய்வமாகக்கருதி நடப்பவளே கற்புடையவள் என்பதாம். இதில் கற்புடையஸ்திரீ தன் கணவனிடம் எம்மாதிரி நடந்துகொள்ள வேண்டுமென்பது பூரணமாய் விளங்கும். புருடனைக் கடவுளாய் நம்பி ஒழுகியதால் தான் நளாயினி சூரியன் உதயமாகாது செய்யவும், தமயந்தி வேடனை யெரிக்கவும், ஓர் இருடிபத்தினி திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கி விடவும், வாசுகி காட்டில் கொங்கணர் கொக்கை யெரித்ததை யறிந்து கொள்ளவும் தெய்வீக சக்தி பெற்றுர்கள்.

(1) ஆதலின் கற்புடையமாது, கணவன் வார்த்தைக்கு ஒருபோதும் மாறு கூறலாகாது. இந்த ஒன்றை மட்டும் மந்திரம்போல் கருதி நடந்தால் மற்ற எல்லாக்கற்பிலட்சணங்களும் இதில் அமைந்திருக்கக் காணலாம்.

(2) கணவன் இல்லாத வேளையில் ஒருகாரியத்தைச் செய்யநேரின், அதைச் செய்வது தன் கணவனுக்குத் திருப்தியளிக்குமா என்று சிந்தித்து அளிக்கும் என்று மனச்சாட்சி கூறினுல் மட்டுமே அதைச் செய்ய வேண்டும்.

21. தருமம்:—மாதர்களிடத்தில்தான் ஜீவகாருண்யமும் தருமசிந்தனையும் முக்கியமாக இருக்கவேண்டும். தருமம் பிறந்ததே சத்தியினிடம்.

வருடைய இடப்பால் அமர்ந்த பார்வதி தேவியாரே காஞ்சீபுரத்தில் முப்பத்திரண்டு அறங்களையும் நடத்திக்காட்டினர்களென்றும் அதனால் அவ்வம்மைக்கு அறம்வளர்த்ததாயார் என்று ஒரு நாமதேயமும் உண்டென்றும் நூற்கள் கூறுகின்றன.

அந்தோ ! அனேக மாதர்களிடம் இந்த முக்கிய குணம் மிக்ககுறைவென்று கூறலாம். வீட்டி விருப்பதை யன்னியர்க்குக் கொடுக்க மனம் வராத உலோபகுணமே இக்குறைக்குக் காரணம். அன்னதானமே எல்லாத் தானங்களிலும் விசேடமான தருமம். அதற்குவேண்டிய உணவுப்பொருள்கள் இவர்கள் கையிலேயே யிருக்கின்றன. ஆடவர் பொருளை யீட்டினாலும் வேளைக்குப் பசியைத்தணிக்க உணவளிப்பவர்கள் இவர்களே. இவர்களே எந்நேரமும் வீட்டி விருக்கிறார்கள். வீதியில் வந்து பிச்சைகேட்போர் “ அம்மா ! கொஞ்சம் சாதம் போடம்மணி!” என்கிறார்களே யன்றி அய்யா என்று கேட்பதில்லை. காரைக்கா லம்மையார் ஒரு அடியார் தம்மகத்தில் வந்து பசி என்றபோது, அச்சமயம் சாதம்மட்டும் சமைக்கப்பட்டுப் பதார்த்தம், குழம்பு முதலிய ஒன்றுமே ஆயத்தமாகாம லிருந்தது. அம்மையார் அந்த அதிதியைச் சற்றுநேரம் பொறுக்கும்படிகூடக் கேட்டுக்கொள்ளாமல், அவர் பசிப்பிணியைச் சகிக்காததைக்கண்டு இரக்கமுற்று, உடனே அதைத் தணிக்கவெண்ணி அன்னமும் பாலும் வட்டித்துக் கணவன்கொடுத்திருந்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றைப் பதார்த்தத்திற்குப் பதிலாகவைத்து அன்ன மளித்ததாலன்றோ பரமசிவத்தின் பேரருளைப் பெற்றார்.

ஆகையால் சகோதரிகளே ! தருமத்தை, அதிலும் முக்கியமாக அன்னதானத்தைப் பிரியத்தோடு செய்ய மறவாதீர்கள். (தொடரும்)

சீடன்.

---

## இல்லறம்—ஜீவகதி.

(272-வது பக்கத் தொடர்ச்சி)

அதோகதி அல்லது சந்திர மார்க்கமென்பது கீழ்நோக்கு மார்க்கமாம். அதனாலேதான் சந்திர கதியானது, அதோகதியென்று கூறப்பட்டது. சந்திரகிரணம் குளிர்ச்சியுள்ளதும் நீர்ப்பசை யுள்ளது மாதலால் தனது கவர்ச்சியிலகப்பட்ட பொருள்களை நனைத்துக் கனதியாக்கிக் கீழே யிறங்கும்படிசெய்யும். இதனாலேதான் இம்மார்க்கத்தை நரகமார்க்கம் என்பர் பெரியோர். நரகமார்க்க மாதலால் இகழப்படுவது. கோபத்தினால் ஒருவனை நிந்திக்கும்போது “உன்கதி அதோபார்” என்றும், “உன்னை அதோகதி சேர்க்கிறேன்” என்றும் இகழ்ந்து கூறுவது சாதாரணமாய் வழங்குகின்றது. ஈண்டு ஞாபகத்தில் வைக்கத்தக்க குறியாவது சூரியகிரணம் தன் கவர்ச்சியில் அகப்பட்ட பொருள்களைத் தன்னிடத்தில் சேரும்படி மேலே இழுக்கு மென்பதும், சந்திரன் கவர்ச்சியி லகப்பட்ட பொருள்களைக் கீழே யழுத்து மென்பதும், சூரியகிரணம் பொருள்களி னிடத்திலுள்ள ஈரத்தை

புலர்த்தி வற்றச்செய்து அதிகலேசாகச் செய்யும் இயல்புள்ள தென்பதும், சந்திரகிரணம் பொருள்களை நனைத்துக் கனதியாகச் செய்யுமென்பதுமே யாம். சமையம் நேர்ந்தமையாற் சில விஷயங்கூறி முடித்து மேலே செல்வாம்.

உலகத்தில் உற்பத்தியாகின்ற சராசரப் பொருள்களெல்லாம் சூரிய சந்திரர்களாலேயே விருத்தியாகின்றன. ஒரு வித்துப் பூமியில் விழுந்தால் சந்திரகிரணம் அதை நனைத்துக் கனதியாக்கிப் பூமியின் சத்துடன் கலக்கச் செய்யும். அவ்விரண்டு சக்திகளாலும் அவ்வித்தினின்றும் வேர் தோன்றிப் பூமியைத் துளைத்துக்கொண்டு கீழே செல்லும். சந்திரகிரணம் அவ்வித்துக்குத் தன் கிரணத்தினால் புஷ்டியையுண்டாக்கி விருத்தியாக்கும். இதனாலே வேர்வளர்ந்து பூமியிலூன்றி நிலைபெறும். இச்சந்திரன் குழந்தைகளுக்குத் தாய்போல் எல்லாப் பொருள்களுக்கும் புஷ்டியைக் கொடுத்து அவற்றை வளர்த்தலால் சராசரங்களுக்குத் தாயென்று கூறப்படும். சூரியகிரணம் அவ் வித்துக்குள் சூட்சுமமாக அடங்கிநிற்கும் ஜீவசத்தியை மேலேயிழுக்கும். அப்போது முளை தோன்றும். அந்தமுளை சூரிய கிரணத்தால் இலேசாகிக் கொழுந்துகளாகவும் கிளைகளாகவும் விருத்தியாகும். இவ்வாறு ஒருசிறிய வித்தைப் பெரிதாகச்செய்து பிரசித்தியடையச் செய்வதில், தமது குழந்தைகளைக் கல்வி, கேள்வி, ஐஸ்வரியங்களால், கீர்த்தியடையச் செய்யும் பிதாவைப்போல் இருப்பதால் சூரியனைப் பிதாவென்பர் பெரியோர். இதனாலேதான் ஜோதிஷ சாஸ்திரங்களும் சூரியனைப் பிதுர்க்கிரக மென்றும் பிதுர்க்காரகனென்றும், சந்திரனை மாதுர்க்கிரக மென்றும், மாதுர்க்காரகனென்றும் கூறுகின்றன. இவ்வாறே! சராயுஜம், அண்டஜம், உற்பீஜம், சுவேதஜம் என்கிற நால்வகைத் தோற்றங்களாகிய சராசர பேதங்களெல்லாவற்றிற்கும், சூரிய சந்திரர்களாலே யுற்பத்திகொள்க. சூரியகிரணத்துக்குச் சக்தி யதிகமாதலால் நாளடைவில் பதார்த்தங்களிலுள்ள சக்தியைச் சுண்டச்செய்து முதிரச்செய்து விடும். பூரணமாய் முற்றிவிட்டால் அப்பதார்த்தத்திலுள்ள சக்தியெல்லாங் குன்றிப்போகும்; அதுவே மரணமென்பது. இவ்வாறு பூமியிலுண்டாகிற சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணம் சந்திர சூரியர்களே யாமென்பது சாஸ்திரங்களின் கருத்து. இதைப்பற்றி யெழுதத் தொடங்கினால் மிகவும் விரியுமாதலால் இம்மட்டில் நிறுத்தி மேலே செல்வோம்.

நமக்குக் குறிப்பிடப்பட்ட ஒரு வருஷகால அளவை தேவர்களுக்கு ஒருநாளாம். தைமாதமுதல் ஆனிமாத இறுதியாகிய ஆறுமாத காலமும் தேவர்களுக்குப் பகற்காலமாம். ஆடிமுதல் மார்கழி யிறுதியாகிய ஆறுமாதமும் இரவாம். பகற்காலம் உத்தராயண மெனவும், இராக்காலம் தட்சிணாயண மெனவுங் கூறப்படும். உத்தராயண மாகிய பகற்காலம் சூரியனுக்குரியது. ஆதலால் அக்காலத்தில் சூரியன் தன் பூரணகிரணங்களுடன் பிரகாசிக்

கும். அப்போது உஷ்ண மதிகமா யிருக்குமென்பது சொல்லவேண்டுவ தில்லை. தட்சிணயணம் சந்திரனுக்குரியது. அக்காலத்தில் சந்திரனது இயற்கைக் குணமாகிய குளிர்ச்சி மிகுதியாம். மழையும், பனியும் மிகுந் திருக்கும் என்பதும் பிரத்தியட்சம். இனி பூலோகத்தாருக்கு ஒரு மாத மாகிய காலவளவை பிதிர்த்தேவதைக்கு ஒருநாளாம். சுக்கிலபட்சமாகிய பதினைந்து நாட்களும் பிதிர்க்களுக்குப் பகலாம். கிருஷ்ணபட்சம் இரவாம். நம்மவர்க்குரிய பகற்காலமும், உத்தராயணமும், சுக்கிலபட்சமும் ஒரு தன் மையன. இரவும், தட்சிணயணமும், அமரபட்சமும் ஒரு தன்மையன. ஆதலால் பகற்கால்ம், உத்தாராயணம் சுக்கிலபட்சம் இம்மூன்றும் சூரியனுக் குரியன. இரவு, தட்சிணயணம், கிருஷ்ணபட்சம் இவைமூன்றும் சந்திர னுக்குரியன. சூரிய காலமென்பது ஊர்த்துவகதிக் குரியகாலம். சந்திரனுக் குரியகாலமெல்லாம் அதோகதிக் குரியகாலமாம். இதுகாறுங் கூறியதனாற் பயன்யாதோ வெனின், நமது பூர்வபிதாக்களாகிய ரிஷிசுவரர்களின் பேர றிவையும் அதுகொண்டு அவர்கள் ஜகத்தவர்க் குபகரித்திருக்கும் பெரும் பயனையும் விளக்கி மகிழ்வதற்கேயாம். அது பின்வருமாறு:—

பூர்வகன்மங் காரணமாக மாதாபிதாக்களின் சுக்கில சுரோணித சம் பந்தத்தினால் வெளிப்பட்டுச் சூரியர்களால் விருத்தியடைந்து பால, யௌ வன, விருத்தாப்பிய பருவங்களை யடைந்த ஜீவாத்மாக்கள் அந்தப் பிராரப்த கன்ம முடிவிலே வியாதியினாலோ மற்றெந்தக் காரணத்தினாலோ ஸ்தூல த்தைவிட்டு வெளிக்கிளம்பும்; இதனையே மரணம் என்று கூறுவது. மர ணத்தை யடைந்த ஆன்மா வேறு சரீரத்தை நாடியலையும் என்பதை முன் னரே கூறினேம். அது எவ்வாறு செல்லும், எவ்விடத்தையடையும், எச் சரீரத்தைப் பெறும் என்பது இப்போது விசாரிக்கத்தக்கது. புண்ணியகன் மங்களையே செய்து சித்தசுத்தி பெற்றுத் தவத்தான் மலங்களைத்தகித்துத் தெய்வ சிந்தனையின் ஞானம் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள் உத்தராயணத் தில், சுக்கிலபட்சத்தில், பகற்காலத்திற் சரீரத்தை விட்ட ஆன்மாக்கள் ஊர்த்துவகதியாகிய சூரியமார்க்கத்தை யடைந்து வேகமாய் மேலே செல் லும். சந்நியாசத்தை யடைந்து முற்றத்துறந்து யாதினும் பற்றற்றிருக்கும் ஜீவான்மாக்கள் ஊர்த்துவ கதியடைந்து வெகுவேகமாய் மேனோக்கிச் சென்று சூரியனையடையும். சூரியமண்டலத்தில் அநந்தமான துவாரங்க ளுள்ளன. அந்தத் துவாரத்தின் மார்க்கமாய்ச் சென்று சூரியனைக்கடந்து மோட்சவுலகமாகிய மீளாக்கதியை அடைந்து நித்தியானந்த சுகம்பெறும். பீரங்கியினின்றும் வெளிப்பட்ட குண்டு வெகு வேகமாய்ச் செல்வதுபோ லக் கபாலத்தைக் கீண்டுகொண்டு மேல் நோக்கிச் செல்லும் ஆன்மாவைச் சூரியனும் ஆக்ரஷண சக்தியால் அதிக சீக்கிரத்தில் இழுத்துக்கொள்வன். இருவகை வேகத்தைப் பெற்றுச் செல்லும் ஆன்மா அப்பொழுதே சூரிய மண்டல ரந்திரமார்க்கமாய் மோட்சவுலகத்தை யடைந்துவிடும். யுத்தகளத்

தில் முகந்திரும்பாமற் சண்டைசெய்து உடலைவிட்ட ஆன்மாவும் அப்பொழுதே சூரியகிரணத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு வீரசொர்க்கத்தையடையும்.

அநேக பாதகங்களைச் செய்திருப்பது மன்றி யுத்தத்தில் அநேக ஜீவர்களை வதைத்த கொலையாகிய மஹாபாதகத்தையும் செய்த ஆன்மா உடனே சொர்க்கத்தை யடைவதற்குக் காரணம் யாதெனின், கூறுவோம். முன்னர் மரணத்தறுவாயில் எந்த எண்ணத்துடன் சரீரத்தை விடுகிறதோ அதற்கேற்ற சரீரத்தையே ஆன்மா அடையும் என்ற நூல்களின் கருத்தை வெளியிட்டோம். யாதொரு எண்ணமு மில்லாத ஆன்மா மோட்சத்தை யடையுமென்பதுங் கூறினோம். ஆதலாற் பற்றற்ற சந்நியாசிகள் மோட்சத்தை யடைகின்றார்கள். யுத்தகாலத்தில் மனைவி, மக்கள், பொருள், ஒன்றிலும், எண்ணமில்லாமல் ஜயம் ஒன்றையே கருதிப் போர்புரியும் யுத்தவீரனது மனதி லாசையொன்று மில்லாமையால் அத்தருணத்தில் சரீரத்தைவிட்ட ஆன்மா சந்நியாசியோ டொக்கும். ஜயமென்ப தொன்றுமட்டும் அவன் மனதில் நின்றமையால் அதன் பயனாகத்துன்பங்களை ஜயித்து வீரசொர்க்கத்தில் பெரும் போகத்தை அனுபவிக்க நேர்ந்தது. அந்த யுத்தவீரனது ஆசையாகிய பசை யற்றமையால் அவனது சூட்சும சரீரமாகிய அணு வெகு லேசாய் நிற்கச் சூரியன் அதிக சீக்கிரமாய் மேனோக்கி யிழுத்துக்கொள்வன். இது காரணமாகவே யுத்தவீரர் பாபிகளாயிருந்தாலும் சொர்க்கத்தையடைகிறார்கள். இக்கருத்தினாலேயே, "சகல பாதகங்களையும் செய்த ஒருவன் மரணத்தறுவாயில் நாராயணா வென்று வைகுண்டத்தை யடைந்தான். சிவ என்று கைலாயத்தை யடைந்தான்" என்று இதிகாச புராணங்கள் கூறின. ஒருவன் பாபியாயிருந்தாலும் மரணவேதனை பொறுக்க முடியாமல் தன் குலப்பெரியார் வழிப்பட்ட தெய்வத்தைச் சிந்தித்து வருந்துவானானால் அவன் அந்தத் தெய்வவுலகத்தை யடைவான் என்பது சித்தம். இது புராணங்களின் கருத்து. சிலர் இவ்வாறு புராணங்கள் கூறியதுபொய் யென்று கூறிப் பரிச்சிப்பார்கள். அவர்கள் அறியாமையே யதற்குக்காரணம். ஒருவன் மரணகாலத்தி லாசையற்றுத் தெய்வச்சிந்தனையோ டிருப்பானானால் அதன் பயனாகிய போகசரீரத்தை யடைவது சித்தமே.

(இன்னும்வரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## ஓர் விடை

கடந்த (தைமாத) சஞ்சிகையில் பக்தியைப் பற்றி நாம் வரைந்திருந்ததில் " இராஜோகுண பக்தி என்பது ஆடம்பரமாய் மதச் சின்னங்களை யணிதல்......" என்று கூறியிருப்பதைப்பற்றி ஒரு நண்பர் விபூதி உருத்திராக்கம் முதலிய சின்னங்களைப் பற்றிச் சமயாசாரியர் முதலியோர்கள் எவ்வளவோ சிறப்பித்துக் கூறியிருக்க அவற்றை யணிவது சத்துவ பக்தியல்ல என்றால்

"அநாகரீகம் பரவிவரும் இக்காலத்தில் அனேகர் அவற்றை யணியப்படா தென அர்த்தம் செய்து கொள்வார்கள்" என்று வரைந்துளார்.

விபூதி உருத்திராக்கம் முதலியவற்றைப் பற்றி ஆகமங்களில் எவ்வளவோ சிறப்பாய்க் கூறப்பட் டிருப்பதும், சம்பந்தர், அப்பர்முதலிய மகான்கள் விபூதியின் மகிமையையும் பெருமையையும் புகழ்ந்து கூறியிருப்பதும் சைவசமயிகள் யாவரும் அறிந்தவிஷயங்களே. இங்கு பக்தியைச்சத்துவம், இராஜசு, தமசு என்று மூன்ருகப் பாகுபாடுசெய்து கூறியது ஆன்ரோ ருளியதேயன்றி நாமே பிரித்ததன்று. மனோநிலைமையைக் கருதியே இப் பிரிவினை கூறப்பட்டது.

விபூதிருத்திராக்கம் முதலிய சின்னங்களை யணிவதே இராஜோகுண பக்தி என்று கூறப்படவில்லை. அவற்றை ஆடம்பரமாக அணிதல், அதாவது அழகு, அல்லது புகழ்ச்சியைக் கருதி, 'ஆ! இவர் மிகப் பக்திமான்' என்று பலரும் வியக்கும்படி ஆடம்பரமாகக் கிரியையாதிகளைச் செய்தலே, இராஜோகுணபக்தி என்று கூறப்பட்டது.

பக்தி மனதைப் பொறுத்த தன்றி வெளி விவகாரங்களைப் பொறுத்த தன்று. அப்படியாயின் அசேதகமான எச்சிற்பட்ட மாமிசத்தைப் பரமசிவத்துக்கு நிவேதனம் செய்தவரும், எச்சில் நீரைச் சிவலிங்கத்தின்மேல் பெய்தவருமாகிய திண்ணனரும், செங்கற்களைச் சிவலிங்கத்தின்மே லெறிந்த சாக்கியரும், பரமனருட்குப் பாத்திராகி யிருக்கமாட்டார்கள். விபூதிக்கிருக்கும் மகிமையும், அதை யணிவோரின் திடபக்தியைப் பொறுத்ததேயாகும். சம்பந்தர் திருநீற்றைத் தடவிப் பாண்டியன் சுரநோயை நீக்கினர். சாதாரணமான ஒருவர் அவ்வாறுசெய்ய முடியுமோ? முடியாது. ஆகையால் ஈண்டு மனநிலைமையைக் கருதி இராஜோகுண பக்தி என்றதேயன்றி விபூதிருத்திராக்கமணிவது இராஜோகுண பக்தி என்று பொருள் கொள்வது தவருகும்.

பத்திரிகாசிரியர்.

---

## கம்பன்.

இராமாயணத்தைத் தமிழில் அருமையான செய்யுள்ருபமாக அமைத்து என்றும் அழியாப்புகழை யடைந்த கவிச்சக்ரவர்த்தியான கம்பநாட்டாழ்வாருக்குக் கம்பனென்னும் பெயர் வருவதற்குப் பலர் பலகாரணம் கூறுகின்றனர். கம்பங்கொல்லையில் காவல் காத்தமையால் கம்பனென்று நாமம் உண்டாயிற்றென்பார் சிலர். வேறு சிலர், அவர் அரசன் முன்பு கையில் கம்பெடுத்தவண்ணம் நின்றபோது இக் 'கம்பனை' என்று அரசன் விளித்தமையால் கம்பனென்னும் திருநாமம் உண்டாயிற்றென்பார். தமிழ்ப்பாஷையில் தேர்ந்த அனைவரும் இவ்விரு காரணத்தையே பெரும்பாலுங் கூறுகிறார்கள். தமிழில் புலமைவாய்ந்து அருமையான உதவிகள் செய்து சிறுகாலம்

முன்பே விண்ணுலகடைந்த ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியார் அவர்கள் "கம்பநாட்டாழ்வார் திருவுருவப்படத்தில் அவர் ஒரு கம்பத்தின் கீழ் நிற்பதுபோல் காட்டியிருப்பது, கம்பன் என்ற பெயருக்கும் 'கம்பம்' என்ற சொல்லுக்கும் பொருத்தத்தை யுணர்த்தும் என்று கூறினார்கள். சில தினங்களுக்குமுன் எமது பாடசாலையில் நடந்த கம்பராமாயணப் பிரசங்க காலத்தில் எங்கள் முதலுதவி உபாத்தியாயர். ம—ா—ா—ஸ்ரீ, பஞ்சாபகேச சர்மா அவர்கள். பி. ஏ. எல்-டி. கம்பனுடைய திருநாமத்தின் காரணங்களை விளக்கிக் காட்டியது வெகு அழகாக இருந்தமையால் அதைப் பலர் அறியும்படி ஆனந்தனில் வெளியிட வேண்டி எழுதுகிறேன்.

கம்பம் என்றால் தூண் என்று சாதாரணமாகப் பொருள்படும். கம்பன் என்றால் தூணிலிருந்து உண்டானவர். அல்லது தூணில் இருப்பவர், தூணுக்கு உரியவர் என்று பொருள். உலகத்திற் கெல்லாம் க்ஷேமத்தைக் கொடுத்தற் பொருட்டும், உலகத்தை ஹிரண்யனுடைய வன்மையினின்று நீக்குதற் பொருட்டும், குழந்தை பிரஹலாதனைத் துன்பத்தினின்று காப்பாற்றவும் ஓர் கம்பத்தினின்று உற்பவித்த ஸ்ரீமன் நரஸிம்ஹமூர்த்திக்குக் கம்பன் என்று ஒருவாறு பெயர் கூறலாம். இப்பொழுதும் கம்பத்தின் மேல் காலை உதைத்துப் படுத்துக்கொண்டால் பெரியோர் கூடாது என்று சொல்வதற்குக் காரணம், பிரஹ்லாதன் 'அந்த நாராயணன் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார்' என்றவுடன், எந்தத் தூணைக் காட்டி 'இங்கும் அந்த நாரணயணன் இருக்கிறானா காட்டு' என்று அவ்விரணியன் கேட்பானோ என்று எதிர் பார்த்து ஒவ்வொரு ஸ்தம்பத்திலேயும் நாராயணன் ஆயத்தமாக இருந்தமையால், கம்பத்தை ஈசுவரன் இருப்பிடமாகக் கொள்வார் என்பதே. கம்பன் என்று நரஸிம்மமூர்த்திக்குச் சாதாரணப் பெயர் ஒன்று. சாதாரணமாக வைத்தீஸ்வர ஸ்வாமியின் 'வினைதீர்த்தான்,' என்ற பெயரை 'தீத்தான்' என்றும் மஹாவிஷ்ணுவைக் 'காத்தான்' என்றும் கிராமப் பெயர்களால் வழங்குவதையும், இப்பொழுதும் பலர் வாசிப்பதையும் காண்கிறோம். அம்மாதிரியே கம்பன் என்னும் நரஸிம்மனின் திருநாமத்தை கவிச் சக்கரவர்த்தியான கம்பன் மாத்திரமேயல்லாமல், அவர் பெரியோரும் வகித்துவந்தார்கள். இதனால் இவர்கள் யாவரும் நரஸிம்மாவதாரத்தை உபாஸிக்கும் சிறந்த பக்தர்கள் ஆவார்கள்' கம்பநாட்டாழ்வாரும் இராமாயணம் பாடிய விஷ்ணுபக்தரே யானாலும், அதிலும் சிறந்த நரஸிம்ம உபாஸனையுள்ளவர் என்பது அறிய வேண்டியது. ஏனென்றால் இராமாயணத்தைத் தமிழில் பாடும் முன், ஆதியில் வால்மீகி ரிஷி வடமொழியில் பாடிய இராமாயணத்தை ஒட்டி ஆராய்ந்து தமிழில் நான் பாடுகிறேன் என்று பீடிகையில் சொல்லிப் பாடிய கம்பநாட்டாழ்வார், வால்மீகி ராமாயணத்தில் காணாத 'ஹிரண்யவதைப் படலம்' என்ற விஷயத்தை விரிவாக எடுத்துரைத் திருப்பது என்ன காரணம்? மேலும் நரஸிம்மாவதாரத்தின் மகிமையை விளக்கச் சில செய்யுள்கள் உபமான

மாகவும் காணலாம். இது காரணங்களால் கம்பநாட்டாழ்வார் நரஸிம்மமூர்த்தியின் சாதாரணப் பெயராகிய கம்பன் என்பதைக் கொண்டாரென்றும், அவரிடத்தில் விசேஷ பக்தியும் அபிமானமும் உள்ளவரென்பதும் விளங்கவில்லையா? ஆகையால் கம்பு வைத்திருந்ததினாலும், கம்பங்கொல்லை காத்திருந்ததினாலும், கம்பத்தோரமாய் நின்றமையாலும், அல்லது சபையினிடத்துள்ளவரை இனிமையாகப்பாடி சிரக்கம்பம் செய்வித்தலாலும் கம்பனென்று திருநாமம் உண்டாயிற்றென்பதைப் பார்க்கிலும், ஸ்ரீமாந்நாராயணன் சிறந்த அவதாரமாகிய நரஸிம்ம மூர்த்தியின் சிறந்த பக்தனானதால் கம்பன் என்றபெயர் உண்டாயிற் றென்பது, இராமாயணத்தி லிருந்து மேற்காட்டிய காரணங்களால் பொருந்துகின்ற தென்று உரைத்தார்.

மஹாதேவன்,
திண்டுக்கல்.

---

## அம்மை-பிள்ளை.

### சிறப்புப்பெயர் ஈறு.

பெயர் இருவகைப் படும். பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என. மக்கள், பெண்கள், சிறுவர் இவைபோன்றன பொதுப்பெயர்; இராமன், கோமதி, கந்தன் இவைபோன்றன சிறப்புப்பெயர்.

இந்தியாவில் மக்கள் பல இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர். சிலர் சமயம் பற்றிய இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர்; வேறு சிலர் தொழில் பற்றிய இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர்; இன்னும் சிலர் ஒழுக்கம் பற்றிய இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர். மகமதியர் சமயம் பற்றிய இனக்கட்டு உடையர்; கம்மாளர் தொழில் பற்றிய இனக்கட்டு உடையர்; வேளாளர் ஒழுக்கம்பற்றிய இனக்கட்டு உடையர்.

இவ்வாறு பல வேறுபட்ட இனத்தாருள் கார்காத்தார், வேளாளர் முதலிய சில இனத்தார். 'அம்மை' என்னும் சொல்லை, பெண்பாற் சிறப்புப் பெயரீறாகவும், 'பிள்ளை' என்னும் சொல்லை ஆண்பால் சிறப்புப்பெயரீறாகவும் கொள்கின்றனர். இத்தகைய சொற்களை நமது முன்னோர் எடுத்தாண்டு கொண்டதன் கருத்தையே இப்பொழுது நாம் ஆராய்ச்சிசெய்தல் வேண்டும்.

நம்முன்னோர் தாங்கள் நிற்கின்ற உயர்ந்த நிலையில் வழங்கத்தக்கசொற்களையும், சொற்றொடர்களையும், அந்நிலையில் நிற்காதவர்கள் இடையிலும் வழங்குதல் உண்டு. எடுத்துக் காட்டாக, 'சிவனே யென்றிரு' என்னும் சொற்றொடரைக் கூறலாம். சிவனைப்பற்றியும், சிவனே யென்றிருத்தலைப் பற்றியும் ஒரு சிறிதும் அறியாத சிறுமகாரிடத்தும் இச் சொற்றொடரை வழங்கி விடுகின்றனர். இதனை எவ்விடத்தில் வழங்குகின்றனர்? 'ஒன்றும் செய்யாதிரு' என்று சொல்லவேண்டிய இடத்தில் வழங்குகின்றனர். ஆகவே சிறுவர்களும் 'ஒன்றும் செய்யாது வாளா இருந்தேன்' என்று

சொல்லவேண்டிய இடத்தில், 'சிவனேயென் றிருந்தேன்' என்னும் சொற்றொடரை வழங்குகின்றனர். இப்பயிற்சி சைவசமயத்தை விட்டு விட்டு வேறு சமயத்துள் நுழைந்த பின்னரும் அவர்களை விடுவதில்லை. ஒருவேளாளர் தம்மனைவி மக்களோடும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். அவருடைய மக்களுள் ஒரு சிறுவன் ஒருநாள் இரவில் உடல் நலமில்லாமையை முன்னிட்டு ஒன்றும் சாப்பிடாது படுத்துக் கொண்டான். மறுநாட்காலையில் அவனைப்பார்த்து, 'நீ நேற்றிரவு என்ன சாப்பிட்டாய்?' என்று கேட்டபோது, 'ஒன்றும் சாப்பிடவில்லை; சிவனே யென்று படுத்துக்கொண்டேன்' என்று சொன்னான்.

இவ்வழக்கத்தால் நன்மை விளைகின்றதா? அன்றித் தீமை விளைகின்றதா? என்று ஆராய்ந்தால், நன்மை விளைகின்றதென்றே அறிகின்றோம். எப்படி? அறிவுடையான் ஒருவன் தனியே இருக்கும்போது, "நம்மைப் பெரியோர் 'ஒன்றும் செய்யாது வாளாவிரு' என்று சொல்லவேண்டிய இடங்களில் எல்லாம் 'சிவனே யென்றிரு' என்கிறார்களே! அது என்? வேலையற்ற நேரங்களில் எல்லாம் 'சிவனே என்றிருக்க வேண்டும்' என்பது அப்பெரியோர் கருத்தா? அப்படியாயின் 'சிவன்' என்பது என்ன? சிவனே யென்றிருக்குமாறு எப்படி? இவற்றை எப்பெரியாரிடம் கேட்டறியலாம்? என் றித்தகைய ஆராயச்சிகளை யெல்லாம் அச்சொற்றொடர் அவனுக்கு உண்டாக்கி, அவ்வழியால் அவன் உயர் நிலை அடைய உதவிசெய்கிறது. இங்ஙனம் இவ்வழக்கத்தால் நன்மைவிளைகிறது என்று அறிகிறோம்.

இனி இவ்வாறே மெய்ப்புலவர்கள் நிற்கவேண்டிய உயர்ந்த நிலையை விளக்கவே 'அம்மை' 'பிள்ளை' என்கிற சொற்களைச் சிறப்புப் பெயரீருக, நம்முன்னோர் கொண்டு வழங்கியுள்ளார்கள். அதுபற்றியே உண்மை அறிஞராம் பட்டினத் தடிகளைப், பட்டினத்துப் பிள்ளையென்றும் (வழங்குகின்றார்கள்; அழைக்கின்றார்கள்; உண்மை அறிவாளர் நிலையாவது, நன்மங்கையரைத் தாய்போலக் கருதித், தாம் சேய்போல் இருப்பதுவே, தாய்=அம்மை; சேய்=பிள்ளை. இவ்வுண்மையை,

" பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சை யெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கை யரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்
சேய்போ லிருப்பர் கண்டீர் உண்மை ஞானந் தெரிந்தவரே "

என்ற பட்டினத்துப் பிள்ளையார் அருண்மொழியாலும் அறியலாம்.

வீ. குமாரவேலுப்பிள்ளை.

## ஓர் கடிதம்

அன்பார்ந்த ஐயா,

நம் அருமை "ஆனந்தன்" நாளது தைமீ 4வல் என்னிடம் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்துச் சுமார் ஒருமாதகால மானதாலும் சங்கராந்திப்பண்டிகை சமயமானதாலும், வெகுபிரியத்தோடு வரவேற்று அவனி

டத்திலுள்ள விஷயங்களை வாசிக்க விரும்பினேன். வாசித்துக்கொண்டு வரும்போது 258-வது பக்கத்தில் "கடவுள் உருவமா அருவமா," என்ற விஷயத்தைப் பார்த்து வாசித்துக்கொண் டிருக்கும் போது அவ்விஷயம் முன் ஒரு காலத்தில் நான் வாசித்த ஞாபகம் வந்தது.

ஆச்சரியத்துடன் யோசிக்க, அவ்விஷயம் முன்பு, அதாவது சென்ற ரௌத்திரிஸு ஐப்பசிமீ 2உல் விருதுப்பட்டி "சைவப்பிரகாசசபை"யிலிருந்து இலக்கம் 4 இட்ட துண்டுப் பத்திரிக்கையிலுள்ள விஷயமென அறிந்தேன்.

இவ்விஷயம் இவ்வூர் வாசியான மேற் சொல்லிய சபையின் அங்கத்தினரும் தற்சமயம் திருவாலவாயில் வசிக்கின்ற சைவசித்தாந்த தமிழ்த்திலகம் திருமறைவன் சீனியா பிள்ளையவர்களால் யெழுதி வெளியிடப்பட்டது.

அப்படியிருக்க நம் ஆனந்தன் 259-வது பக்கத்தில் கையொப்பமிட்டவர், தாமே அவ்விஷயத்தை யெழுதியதாகப் பாவனை காட்டி அவருடைய திருநாமத்தையும் அவ்விஷயத்தின் கீழ் நாட்டி யிருக்கின்றார். அவருடைய புத்திசாலித்தனம் இம்மட்டோ டன்றே!

நம் அருமைச் சகோதரா ஞகிய ஆனந்தன், என்னைப்போ லொத்த அறிவிலிகளுக்கும் நாம்பேசும் விஷயத்தை வெளியிட்ட நம் அருமைச் சகோதாருக்கும் எத்தனையோ தடவை இம்மாதிரி அற்ப விஷயத்தில் தலையிடக் கூடாதென்று புத்திசொல்லி யிருக்கின்றதை அதன்படி நடக்கத்தெரியாத நாம் என்ன விஷயங்களை நம் ஆனந்தனுக்கு எழுதப் போகின்றோம் என்பதை நம், 259-வது பக்கத்தில் கையொப்ப மிட்டிருக்கிற திருநாமத்தையுடைய சகோதரர் அறியவில்லைப் போலும்.

இவ்விஷயமாக, நான் அதிகம் வரைய அஞ்சியும் நம் ஆனந்தனே இதற்குப் பரிகாரம் நடத்திக்கொள்வா னென்று நினைத்தும் இம்மட்டோடு நிறுத்துகின்றேன்.

நான், நம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால்:—

நாம், நம் ஆனந்தனுக்கு உண்மையான முன்னேற்றத்தைக் கருதிய சகோதரர்களாக——புத்தியில் சிறந்த ஆனந்தனின் வார்த்தைகளைக் கடவாத சகோதரர்களாக——நாம் ஆனந்தனுக்குத்துரோகம் நினைக்காத சகோதரர்களாக, உண்மையாக இருக்கும் பக்ஷத்தில் 259-வது பக்கத்தில் கையொப்பமிட்ட நம் சகோதரர் நடத்தையை மேற்கொள்ளாமல் நம் ஆனந்தன் இது விஷயமாக நமக்குச்சொல்லிவந்ததையும் இனிச் சொல்லப்போவதையும் அறிந்து அதன்படி நடப்பதே நம் ஆனந்தனுக்குச் செய்யும் நன்றியென்று அறிய விரும்புகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
S. சுந்தரராஜ பிள்ளை,
விருதுப்பட்டி.

குறிப்பு:—இதில் குறித்துள்ள வியாசத்தை நாம் தெய்வசங்கல்பமாகச் சுமார் மூன்றுமாதகாலம் வெளியிடாமலே யிருந்தோம். அதன்பிறகு அவர் எமக்கு 3, 4 கடிதங்கள் வரைந்து தொந்திரவு செய்தபிறகே அதைப் பிரசுரிக்க நேர்ந்தது. இல்லாத கௌரவத்திற்கு ஆசைப்படுதல் உள்ள கொஞ்சம் கௌரவத்தையும் போக்குவதோடு அவமானத்தை யுண்டாக்குமென்று நாம் பன்முறை வரைந்திருந்தும், இத்தகைய இழிவான நடக்கையுடையோர் இன்னும் நமது ஆனந்தனுக்குத் தீங்கிழைக்க முற்படுவதை யறிய மிக்க விசனிக்கிறோம். இதைப்பற்றி வரைய நேர்வதே நமக்கு மிக்க மன வருத்தத்தை யுண்டாக்குகிறது.

பத்திரிகாசிரியர்.

---

## ப சு.

சகோதர சகோதரிகாள் !

பசுவிற்குப் பல நாமதேயங்க ளிருப்பினும், அவைகளில் முக்கியமானது, ஆனினம்.

"அமரர்கண்முடியு மறுவகையானும்" என்ற சூத்திரவாயிலாய் வாழ்த்தப்படும் பொருள் அறுவகையென விளக்கி அவற்றுள் பசுவை ஒன்றென எடுத்து வாழ்த்தியிருக்கிறார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

'ஆனினம் வாழ்க,' என்றது என் ?

"தங்குமகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன
பொங்குபுனித தீர்த்தங்க ளெல்லா மென்றும் பொருந்துவன
துங்கவமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
வங்கமனைத்துந் தாமுடைய வல்ல வோநல் லானினங்கள்.
(சண்டேசுர நாயனார் புராணம்)

1. வேதாவுங் கரியவனு மாவினது கோட்டடியின் விளங்கி வாழ்வர்
கோதாவி முதற்றீர்த்தங் கோட்டினுதிச் சராசரமுங் கூடி நிற்கு
மீதான சிரத்தமலன் விமலையத னடுநெற்றி விசாக னுசி
மீதானந் தனிலதனுண் ணுசிதனி னுகேசர் விளங்கு வாரே.

2. ஆசகல விருகன்ன நாப்பணச்சு வினிதேவ ரமர்ந்து வாழ்வர்
தேசுடைய பரிதிமதி நயனத்திற் றந்தத்திற் செறியும் வாயு
வோசையுறு நாவதனில் வருணனுரை மகளோங்கூங் கார நெஞ்சி
னேசமுற யமனியக்கர் கண்டதலத் தெந்நாளு நிலவு வாரே.

3. ஒட்டத்தி லுதயாத்த மனசந்தி யிவையுறையு முறைவன் கண்டத்
தீட்டுடைய விந்திரனே யியிலிருப்ப ருருசுரென வியம்புந் தேவர்
வாட்டமிலாச் சாத்தியரே வாழ்வார்க ளூரமதனி லனில வாயு
நீட்டியதா ளொருநான்கின் மருத்தென்பர் முழந்தாளி னிலவு வாரே.

4. குரத்தினுதி பன்னகரே குடிகொள்வர் காந்தருவர் குதத்தி னுப்ப
ணிருப்பார மகளிர்கண மிவரெல்லா மேற்குதத்தின் முதுகி னெல்லை
யுருத்திரரே சந்துதொறு முறைவார்கள் வசுதேவர் பிதிர்க்க ளோங்கிப்
பகுத்தவரைப் பலகைதனிற் பகத்துறைவ ரெழுமாதர் பரிவு கூர்ந்தே.

5. திருமகளே யபானத்தி னுகேச ரடிவாலிற் சிறந்து வாழ்வ
ரிரவியொளி வாலின்மயி ரிலங்கியிடுஞ் சுரந்திதா னேயு நீரின்
வாமுடைய யமுனைமய மதுதன்னின் மாதவர்க ளுரோமம் வாழ்வ
ருமுடைய பூதேவி யுதரத்திற் பயோதரத்தி னுததி யெல்லாம்.

5. துடரத்தி னிதையத்திற் றழைத்தமுக மதுதன்னிற் றவரு மங்கி
கடனுடனே காருகபத் தியமெழுவா யொருமூன்றுங் கடின வென்பி
னுடலுறுசுக் கிலந்தனினு முறையுமக வினையனைத்து முறுப்புத்
திடமுறுகற் புடைமடவார் செறிந்திருப்பா ரிம்முறையைச் [தோறுஞ்
[சிந்தை செய்தே.

இதனால் பசுவின் கொம்பினடியில் பிரமவிஷ்ணு வசிக்கிறார்கள். கொம்பினுனியில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சகல சராசரங்களும் பொருந்தியிருக்கும். சிரசில் பரமசிவனும், நடுநெற்றியில் பார்வதியாரும், நாசியில் முருகவேளும், உண்ணுசியில் திக்குப்பாலகர்களும், காதுகளில் அச்சுவினி தேவர்களும், கண்களில் சூரிய சந்திரர்களும், பற்களில்வாயுவும், நாவில் வருணனும், ஊங்காரத்திற் கிடமாகிய நெஞ்சில் சாஸ்வதியும், இரு தயத்தில் யமனும், மார்பில் காந்தருவரும், உதட்டில் காலசந்தி மாலைசந்தி தேவதையும், கழுத்தில் இந்திரனும், இமிலில் சூரியனும், மார்பில் சாத்திய ரும், கால்களில் வாயுவும், முழந்தாளில் மருத்துக்களும், அசுவினிதேவர்க ளும், குரத்து நுனியில் நாகலோகத்தாரும், குரத்து நடுவில் காந் தருவரும், மேற்குரத்தில் தேவமாதர்களும், முதுகில் உருத்திரரும், சந்து களில் வசுக்களும், அரைப் பலகையில் பிதிர் தேவர்களும், பக்கத்தில் சத்த மாதர்களும், குதத்தில் இலக்ஷிமியும், அடிவாலில் தேவர்களும், வால்மயிரில் சூரியனொளியும், கோசலத்தில் கங்கையும், கோமயத்தில். யமுனையும், உரோமத்தில் மாதவர்களும், வயிற்றில் பூதேவியும், முலையில் சமுத்திரமும், வயிற்றில் காருகபத்தியமும், இருதயத்தில் தக்கணக்கினிய மும், முகத்தில் ஆகவணீயமும், எலும்பிலும் சுக்கிலத்திலும் யாகாதிகளும், ஏனைய அவயவங்களில் கற்புடை மகளிரும் வாழ்வார்கள். இவ்வானினங் களின் அவயவங்க ளெல்லாவற்றிலும் சகல தீர்த்தங்களும், தேவர்களும் முனிவர்களும், இருத்தலால் எல்லாயோனிகளிலும் இவை சிறந்தனவெனக் கொள்ளப்பட்டன. பசுக்கள் இம்மைமறுமை இரண்டிலும் பயனைத்தரும். இப்பசுக்கள்-நந்தை-பத்திரை - சுரபி-சுசீலை - சுமனை—என ஐந்து வகைப் படும். அவைகளில் நந்தை கருமை கலந்த பொன்னிறமும், பத்திரை கரு நிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகைநிறமும், சுமனை செந்நிற மும் உடையன.

இப்பசுக்கள் சிவபெருமானது சந்நிதிக்கணுள்ள இடபதேவரின் பக்கத்தி லிருந்தன. ஆகவே ஆனினம் என்பது ஆனும் அதனது இனமாகிய விடையும் என்பது பொருள் பயக்கும். பயக்கவே பரமசிவமும் பார்ப்பதி தேவியாரும் ஆரோகணித் தருளப் பெறுதற் குறியனவாயும் தருமசொரூபமாகவு மிருக்கின்றன. இதனை

உள்ளுந் தகைமை யினிப்பிறவே றுளவே யுழைமான் மறிக்கன்று
துள்ளுங்காத்தா ரணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றேவிச் சுரபிகுலம்.

என்பதாலறிக.

இவற்றைச் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டுப் பூமியிற் பிறக்கச் செய்தலால் அவை ஆதியிலே பாற்கடலின் வழியாய்த் தோன்றிப் பின் பூமியில் விளங்கின. இப்பசுக்களின் மகிமை சர்வோத்தமம் என்னும் சிவாகமத்தின் உபதேசம் ஐந்தனுள் ஒன்றாகிய சிவதருமோத்தரத்தில் கோபுரவியவில் விஸ்தரிக்கப் பட்டது.

லௌகீக வைதிக கருமங்களுக்கு இன்றியமையாப் பொருள்களாகக் கொள்ளப்பட் டிருக்கின்றவை எவை? பசுக்கள் தரும்படியான பால்தயிர் நெய் கோசலம் கோமயம் என்பவைகளே.

ஔஷதங்களுக்குள் லேகியம் கிருதம் முதலானவைகள், பசுக்கள் தரும் பால் நெய் முதலியவை இன்றி முடியுமா? முடியாவே! நேர்வாளத்தைச் சுத்திசெய்யவும், பாஷாணுதி விஷங்களைப் போக்கவும், விஷபேதிக்காதாரமாயுள்ள விஷக்காற்றினை யொழிக்கவும், விஷஜந்துக்கள் அணுகாதிருக்கவும் பிரதான கருவியா யிருப்பதெது? கோமயம். இன்றைக்கும் ஸ்மார்த்தர் வைணவர் முதலிய சமயிகள் பலராலும், சுத்தமுடைப் பொருளாகவும் பிறவற்றைச் சுத்தமாக்கும் பொருளாகவும் மதிக்கப்பட்டு வருகின்றது எது? கோமயம் என்னும் பசுஞ்சாணமே. புறத்திலுள்ள எவ்வித துர்க்கந்தங்களையும் எவ்வித அசுசிகளையும் நீக்குகின்றது எது? கோமயம் என்னும் பசுஞ்சாணமே.

மகோதரீ முதலிய நோய்களை நீக்கவும் பூச்சிபுழு முதலியவை அணுகாதிருக்கவும் உபயோகப் படுவதா யிருப்பது எது? கோசலமே. சில ஔஷதங்களுக்கு அனுபானமாக அப்பசுக்கள் தரும் பால் தயிர் வெண்ணெய் இவை அவசியம் வேண்டி யிருத்தலோடு, அவ்வச் சமயத்தாரும் சாதியாரும் தத்தம் தேகபோஷணைக்கு ஆவின்பால், தயிர் வெண்ணெயையே மிகச்சிறந்தனவாகக் கொள்கின்றனர். ஆயுள்வேதக்காரரும் பற்பல மருந்துகளைப் பசுஞ்சாணவறட்டிகொண்டு புடமிடுவதோடு, அவ்வறட்டிகொண்டு சமைத்தவுணவு மகா புனிதமாயும், நோய்தீர்க்கு மருந்தாகவும் இருக்குமென்பர்.

(இன்னும் வரும்)

வா. ந. வேணுகோபால் பிள்ளை.
செக்கழனிமேடு, வாயலூர்.

## கடிதம் வரைவோர்க்கு ஓர் அறிவிப்பு.

1. அனுப்பும் வியாசத்தின் அடியில் தங்கள் பெயரை வெளியிடாது புனைப்பெயர் கூறுவோரும், பத்திரிகாசிரியருக்குத் தங்கள் பெயர் விலாசம் யாவும் தெரிவித்தாலன்றி அந்த விஷயம் பிரசுரிக்கப் படமாட்டாது.

2. சந்தேகங்களைத் தெளிவித்துக் கொள்ள விரும்புவோரும் அவ்வாறே பெயர் விலாசம் இவற்றை யறிவிக்க வேண்டும். பலபேருக்கு ஏற்படக்கூடிய சந்தேகத்திற்கு மட்டுமே சஞ்சிகையில் விடையளிக்கப்படும், மற்றவற்றிற்குக் கேட்போர்க்கு மட்டுமே நேரே பதில்அளித்து விடப்படும்.

பத்திரிகாசிரியர்.

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(278-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்டேஷன் மாஸ்டர்:—மூன்னூற் றைம்பது ரூபா யாகும். ஆனால் எந்தச் சமயத்திலும் எதிரில் ஸ்பெஷல் வண்டி வந்தாலும் வந்துவிடும்.

ஆனந்தஸிங்:—நான் இராஜாங்கத் துப்பறிபவன். ஒரு மிக்க முக்கியமான குற்றத்தை நான் கண்டுபிடிக்கவேண்டும். இதோபார் என் முத்திரை. இதில் என்ன ஆபத்து நேர்ந்தாலும், நான் அதற்கு முழுதும் ஜவாப்தாரி. நான் மூன்றுமணிக்குப் புறப்பட்டு அந்த அரசஞ்சாலைத் திருப்பத்திற்குச் செல்லவேண்டும். நீ கேட்கும் தொகைக்கு இரண்டத்தனை யளிக்கிறேன். மற்ற எல்லாவற்றிற்கும் நான் ஜவாப்தாரி.

ஸ்டேஷன் மாஸ்டர்:—“அப்படியாயின் தங்கள் பிரியப்படி ஒப்புக்கொள்கிறேன்” என்றான்.

அந்த ஏற்பாட்டின்படி ஆனந்தஸிங் மூன்று மணிக்குப் புறப்பட்டுச் சாமிநாதன் பையை யெறிந்தவிடத்திற்குச் சென்று திரும்பி வந்தான். அங்கு அவன் கண்டகாட்சியால் இத்தபால் களவின் விஷயம் பூரணமாய் ருசுவாய் விட்டது. கள்ளரை யுடனே கைதுசெய்யப் போதுமான ருசு அகப்பட்டு விட்டது.

## 11-வது அத்தியாயம்.

இதற்கிடையில் நமது அம்பலவாணன் நிரபராதியா யிருந்தும் சிறைவாசத்தி லிருக்கிறான். ஆனந்தஸிங் கூறிய உறுதி மொழிகளால் அவன் மனத்தேறுதல் உடையவனா யிருந்தான். ஆனால் அவன் கூறிச்சென்றது முதல் அவனிடமிருந்து ஒரு சங்கதியும் வரவில்லை. அவன் இக்குற்றத்தைக்

கண்டு பிடிக்கிறான். ஆதலால் அவனுடைய செயல்களெல்லாம் முடிவுவரையில் இரகசியமாகவே யிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆயினும் இஷ்டப்படி உலாவுவதை விட்டுச் சிறையிலடைபட் டிருப்பது அவனுக்குச் சகிக்க முடியாத கஷ்டமாயிருந்தது. எப்போது சுயாதீனமாய் வெட்ட வெளியில் திரிவோமோ வென்று மிக்க ஆவலாயிருந்தது.

ஆயினும் இப்போது நாம் இங்கிருந்து ஓடி விட்டால் நமது செய்கை நாம் நிரபராதி யென்பதற்கு நேர்விரோதமா யல்லவோ இருக்கும் என்று சிந்தித்தான். சிறைச்சாலையில் அவன் இருக்கு மிடம் ஜனசஞ்சார மில்லாத பக்கத்தி லிருந்தது. அவன் அறை இரண்டாவது மாடியி லிருந்தது. அதன் எதிரில் ஒரு பெரிய முற்றமிருந்தது. அதில் சிறையாளிகள் ஜல்லிகள் உடைத்துக்கொண் டிருந்தார்கள். அம்பலவாணன் சாளரத் தருகில் நின்று கொண்டு அதைப் பார்த்துக்கொண் டிருப்பான். இடையிடையில் இதை விட்டுப் போய்விடவேண்டு மென்று எண்ணம் வருவதுண்டு, ஆனால் நாம் ஓடிவிட்டால் நிரபராதி யென்று நம்பமாட்டார்களே யென்ற எண்ணம் தடை செய்துகொண்டே யிருந்தது.

ஒருநாள் அவன் அவ்வாறு சாளரத்தில் நின்று பார்த்துக்கொண் டிருக்கையில் சாளரத்தி லிருந்த ஒரு கம்பியைத் தற்செயலாய்ப் பிடித் தசைத்தான். அது போடப்பட்டு நெடுங்காலமானதோடு வெயில், காற்று, மழையிவை தாக்கக்கூடிய விடத்திலிருந்த தாதலால், இரும்புக்கம்பி துருப்பிடித்திருந்ததோடு மரச்சட்டமும் உள்ளே உளுத்துப் பலம்போ யிருந்தது. மற்றக் கம்பிகளையும் அசக்கிப் பார்த்தான். மையத்தி லிருந்த மூன்றுகம்பிகள் அவ்வாறே யிருந்தன. அவை மூன்றையு மெடுத்து விட்டால் ஒரு ஆள் தாராளமாய் நுழைந்து போகக்கூடிய வழியுண்டாய் விடும்.

இதையறிந்தது முதல் இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டு மென்ற எண்ணம் அவன் மனதில் நிலைத்து விட்டது. பிறகு ஆலசியம் செய்யப் பிரியமில்லை. மறு நாள் இரவு மிக்க இருளாயிருந்தது. இது தான் தக்க காலமென் றெண்ணி நடு இரவில் கம்பிகளைப் பெயர்த்து விட்டான். தன் படுக்கையிலிருந்த துப்பட்டியை இரண்டாகக் கிழித்து 10 அடி 12 அடி நீளமுள்ள இரண்டு கயிறுகள் திரித்துக் கொண்டான். ஒன்றை யிடுப்பில் சுற்றிக்கொண்டான். மற்றொன்றின் ஒரு முனையைச் சாளரத்திலுள்ள இரண்டு கம்பிகளில் கட்டிவிட்டு அதன் வழியாய் வெளியில் இறங்கி விட்டான்.

எதிரில் இருக்கும் முற்றத்திற் கப்பால் ஒரு மதில்சுவர் இருக்கிறது. அதை யெப்படித் தாண்டுவது? பகலில் கல் உடைப்பவர்கள் தங்கள் சுத்திகள் முதலிய கருவிகளை வைப்பதற்காக ஒரு குடிசைபோட் டிருந்தார்கள். அது சற்று எட்ட மதில் ஓரத்தில் போடப்பட்டிருந்தது. அதை அம்பல

வாணன் பார்த்திருக்கிறான். ஆதலால் அக்குடிசை மேலேறி மதில் சுவரின் மேலேறி விட்டான். தன்னிடமிருந்த இன்னொரு கயிற்றைக் குடிசையில் உள்ள நெட்டாங்குக் கழியின் கோணையில் கட்டிச் சுவரின் வெளிப்பக்கம் அதைப்பிடித்து இறங்கிக் கீழே குதித்து விட்டான்.

இனி எங்கு செல்வது? எந்த விடமாயினும் சரி. சிறைச்சாலையை விட்டு எவ்வளவுதூரம் போய்விடுகிறேமோ அவ்வளவும் நலமே யென்று கருதிச் சென்றான். மிக்க துரிதமாய் நடந்து நகர எல்லையைக் கடந்துவிட்டான். இனி எங்கு செல்வதென்று சிந்தித்தான். "இப்படிப்பட்ட சமயத்திலும் வயோதிகரான நமது தாய் தந்தையர் நம்மைப்பற்றி மிக்க துயரம் அனுபவித்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களைத் தரிசித்துவிட்டு எந்தத் திக்கேனும் செல்லலாம்" என்று தீர்மானித்துக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினான்.

அவன் திரும்பிய இடத்திலிருந்து வீட்டிற்குச் செல்லவேண்டு மாயின் கழனிகளையும், தோட்டங்களையும் கடந்து செல்ல வேண்டும். வீடிருக்குமிடத்திற்குச் சமீபத்தி லிருக்கும், ஒரு தோட்டத்தில் பிரவேசித்தான். அச்சமயம் பின்னும் முன்னும், ஆட்கள் வரும் காலடிச்சத்தம் கேட்டது. அவன் நிதானித்துப் பார்ப்பதற்குள் ஐந்தாறுபேர் வந்து சூழ்ந்துகொண்டார்கள். அதில் ஒருவன் ஒரு இராந்தல் வெளிச்சத்தைத் திருப்பினான்.

உடனே அவர்கள் போலீஸார் என்று தெரிந்ததே அம்பலவாணன் ஆவி சோர்ந்துவிட்டது. இவ்வளவு கஷ்டப்பட்டுச் சிறைச்சாலையி லிருந்து தப்பித்துக்கொண்டு வந்த பிறகு கடைசியில் இவர்களைக் காணவே அவனுக் குத்தலைமேல் பேரிடி விழுந்ததுபோல் இருந்தது. என்ன செய்வதென்றும் ஒன்றும் தோன்றாது பிரம்மத்தி பிடித்தவன்போ லாய்விட்டான்.

அச்சமயம் சற்றுதூரத்தி லிருந்து "நில்லுங்கள்" என்று ஒரு அதிகாரத்தொனி கிளம்பியது. மறுநிமிடம் நடுத்தர உயாமான ஒரு மனிதன் அக்கூட்டத்தின் மத்தியில்வந்து நின்றதும் தன் முகமூடியைக் கழற்றினான். அவனைக் கண்டதே அம்பலவாணன் அபபோதிருந்த பயம் திகில் பிரமை யாவையும் விட்டு மிக்க ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தான். ஏனெனில் அந்த ஆள் நமது ஆனந்தலிங்கே.

* * * * * * * *

* * * * * * * *

இச்சம்பவங்கள் நடக்கும் அதே இரவு சுமார் 12 மணிக்குச் சாமிநாதனுடைய மாளிகைக்குள் கருத்த உடையும் முகப்போர்வையும் அணிந்த நான்குபேர் ஒவ் வொருவராய்ப் பதுங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தார்கள்.

(தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்.

## ஓர் எச்சரிக்கை

### துந்துபிவூ பஞ்சாங்கம்.

நமது ஆனந்தபோதினி சுத்த திருக்கணிதப் பஞ்சாங்கத்தைப் போல், பார்ப்போர் ஏமாந்து போகத்தக்க விதமாய் வேறு பஞ்சாங்கங்கள் வெளி வந்திருப்பதாகத் தெரிவதால், நமது பஞ்சாங்கத்தை வாங்க விரும்புவோர், பஞ்சாங்கத்தின் தலைப்பக்கம் அடியில்,

"ஆனந்தபோதினி" பவர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. என்று அச்சிட்டிருக்கிறதைக் கவனமாகப் பார்த்து வாங்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படவேண்டிய பஞ்சாங்கம் மாசிமாத சஞ்சிகையனுப்பிய இரண்டு வாரத்திற்குள் அனுப்பப்படும்.

நா. முனிசாமி முதலியார்.

---

## ஒரு அற்புதக்கெடிகாரம்—சிற்பசாமர்த்தியம்.

உலகத்தில் இதுவரையில் கண்டிருக்காத, ஒரு அத் யாச்சர்யமான சிற்ப வேலையாகிய 1-80 - மீட்டர் உயரமுள்ள ஒரு கெடிகாரத்தை ஒரு செய்ன்ட் ஆள்டர் கெடிகாரக்காரர் செய்திருக்கிறார். அவருடைய பெயர், ஸ்ரீ பிரிக்லென்ட். அவர் சென்ற பனிரெண்டு வருஷங்களாக அந்தக் கெடிகாரத்தைச் செய்தார். அதினுடைய அடிவாரத்தில், முக்யமான நக்ஷத்திரங்களுடன்கூட ஒரு ஆகாயவட்டமானது அமைக்கப் பெற்றிருக்கின்றது. சூரியனைச் சுற்றிப் பூமி சுழல்வதையும், மாதங்களைக் காட்டுவதையும், ராசி வீடுகளில் கிரஹங்கள் இடம் பெயர்தலையும், சந்திரன் 28 நாளில் மண்டலம் மாறுவதையும், அதில் அமைக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.

மேலே ஒரு சிறு ரதத்தில் ஒவ்வொரு நாளும் வாரத்தின் நாட்களை ரூபகப் படுத்தும் ஒவ்வொரு தேவதை தோன்றுகிறது.

முள் காட்டும் முற்புறத்தில் ஒரு சிறு அறையில் இரண்டு மணிகளைப் பிடித்துக்கொண்டு மரணதேவதை நிற்கின்றது. அது உச்சிகாலம் தவிர மற்ற ஒவ்வொரு மணிக்கும் அது ஒரு அடி அடிக்கின்றது. வாழ்க்கையின் நான்கு பருவத்தைக் காட்டும் நான்கு ரூபங்கள் நான்கு பாதங்களை அடிக்கின்றன. காலை 7-மணியிலும் மாலை 7-மணியிலும் மட்டும் அவைகள்காணப் படுகின்றன. இன்னொரு மாடத்தில் தனது 13 சிஷ்யர்களுடன் கூட கிருஸ்து தேவர் காணப்படுகின்றார். அவர் உச்சிக்கால சோத்தின் நான்கு பாதங்களையும் அடித்த பிறகு சிஷ்யர்களில் பன்னிருவர் அவர் முன்வந்து வணங்கி மணியை ஒருதரம் அடிக்கிறார்கள். ஜுடாஸ் என்ற பதின்மூன்றாவது சிஷ்யன் அவருக்கு வணங்காமலும், மணியை அடிக்காமலும், தலையைத் திருப்பிக் கொள்ளுகிறான். மற்ற சிஷியர்களைப் போல் அவன் ஆசீர்வாதம் பெறுகிறதில்லை.

கடைசியில் எல்லாவற்றிற்கும் மேலே உட்கார்ந்துகொண்டு இருக்கும் படியான ஒரு சேவற் கோழி மூன்றுதரம் சிறகடித்துக் கூவுகிறது.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்

**துன்மதிஞூ பங்குனிமீ—சாலிவாகனம் 1844—கலி 5023.**

**பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40**

**இங்கிலீஷ் 1922ஞூ மார்ச்சுமீ-ஏப்ரல்மீ**

| பங்குனி | மார்ச்சு | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | செ | பிர16-57 | உத்-7-31 | அ7-31சி | வசந்தோத்ஸவ, |
| 2 | 15 | புத | துதி8-43 | அஸ்-0-57<br>சித்-55-25 | ம0-57சி | சாதுர்மாஸ்ய துதியை கல்பாதி |
| 3 | 16 | வியா | திரி1-31<br>சது55-47 | சுவா-51-18 | அ51-18சி | நாமகரணம், வித்தியாரம் விவாகம் செய்ய |
| 4 | 17 | வெ | பஞ்51-40 | விசா-48-57 | சித்-60 | கோடியுடுக்க |
| 5 | 18 | சனி | சஷ்49-33 | அனு-48-30 | சித்-60 | யாத்திரைசெய்ய |
| 6 | 19 | ஞா | சப்49-22 | கேட்-49-53 | ம49-53அ | |
| 7 | 20 | திங் | அஷ்51-8 | மூல-53-7 | சி53-7ம | |
| 8 | 21 | செ | நவ54-37 | பூரா-58-5 | சி58-5பி | |
| 9 | 22 | புத | தச59-28 | உத்-60-0 | அமி60 | |
| 10 | 23 | வியா | ஏகா60-0 | உத்-4-20 | சித்-60 | |
| 11 | 24 | வெ | ஏகா5-20 | திரு-11-10 | ம11-10சி | |
| 12 | 25 | சனி | துவ11-45 | அவி-19-15 | சி19-15அ | |
| 13 | 26 | ஞா | திர18-25 | சத-27-5 | சித்-60 | |
| 14 | 27 | திங் | சது24-52 | பூரட்-34-45 | சித்-60 | |
| 15 | 28 | செ | ● 30-52 | உத்-41-52 | அ41-52சி | |
| 16 | 29 | புத | பிர36-10 | ரேவ-48-20 | மர-60 | யுகாதி |
| 17 | 30 | வியா | துதி40-32 | அசு-53-57 | அ53-57சி | வேதவியாசதீர்த்தம் |
| 18 | 31 | வெ | திரி43-52 | பர-58-27 | சித்-60 | ஆண்டோளன்திரிதியை |
| 19 | 1 | சனி | சது46-2 | கிரு-60-0 | அமி-60 | கரிநாள், கிருத்திகை |
| 20 | 2 | ஞா | பஞ்46-52 | கிரு-1-45 | சித்-60 | லட்சுமி பஞ்சமி |
| 21 | 3 | திங் | சஷ்46-16 | ரோ-3-52 | அ3-52சி | ருதுசாந்தி, சீமந்தம் |
| 22 | 4 | செ | சப்44-16 | மிரு-4-30 | சித்4-30ம | பிரயாணம்விலக்க |
| 23 | 5 | புத | அ40-51 | திரு-3-48 | சித்-60 | பவானி யுற்பத்தி |
| 24 | 6 | வியா | நவ36-2 | புன-1-40<br>பூச-58-8 | அ1-40சி | ஸ்ரீராமநவமி, ஸ்ரீராமஜயந்தி, வாரகஜயந்தி |
| 25 | 7 | வெ | தச28-50 | ஆயி-53-35 | மர-60 | தர்மராஜா தசமி |
| 26 | 8 | சனி | ஏகா23-1 | மக-48-5 | அ48-5சி | திதிதுவயம் |
| 27 | 9 | ஞா | து15-10 | பூர-41-57 | சி41-57அ | பிரதோஷம், மதன திரயோதசி |
| 28 | 10 | திங் | திர6-57<br>சது58-37 | உத்35-35 | சித்-60 | பங்குனி உத்திரம், தமன சதுர்த்தசி |
| 29 | 11 | செ | ○50-30 | அஸ்-29-17 | சித்-60 | சாந்திசைத்ர ○ பௌர |
| 30 | 12 | புத | பிர43-6 | சித்-23-27 | சித்-60 | பிரயாணத்திற்கு விலக் |
| * | 13 | வியா | து56-38 | சுவா-18-32 | அ18-32சி | துந்துபி வருஷப்பிறப்பு |

1922ஞ் ஏப்ரல்மீ

| | | | |
|---|---|---|---|
| கு-ச கே | | | |
| புத | 18உ மே-சு<br>20உ மீ-புத | | |
| | | | |
| | செ | | ராகு கு-ச |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS,